ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும்
ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஆசிரியர்: பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3. தனிப் பிரதி 4 அணா

மலர் 13 | நவம்பர் 1952 | இதழ் 11

மதப்பிரசாரத்தால் மக்கள் கல்வி வளருமா?

"கோவில் சொத்தைப் பள்ளிக்கூடங்கள் கட்டவும், ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தவும் பயன்படுத்த சர்க்கார் அனுமதிக்கமாட்டார்கள்"

—(சென்னை மடாலய மந்திரி கே. வெங்கடசாமி நாயுடு)

"பள்ளிக்கூடங்கள் தேவையில்லை. ஆனால் பெற்றோர்களே, அவர் அவர்கள் பிள்ளைகளுக்கு வீட்டிலேயே பாடங்கள் போதித்தால் போதுமானது. அவர் அவர்கள் மதக் குறிகளை, உதாரணமாக வைணவர்கள் சமுகத்தில் அலங்காரமாகப் பட்டைநாமம் போட்டுக்கொள்வதில் வெட்கப்படக்கூடாது."

—(கனம் பிரதம மந்திரி சி. இராசகோபாலாச்சாரியக்

அக்டோபர் 25ஆம் தேதி ஸ்ரீவில்லிபுத்தூர் நகர சபையில் மடாலய மந்திரி கே. வெங்கடசாமி நாயுடு அவர்களுக்கு வரவேற்புக் கொடுத்தபோது, அந்த வரவேற்புப் பத்திரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் கோவில் நிதியில் ஒரு பகுதியை, பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றை ஆரம்பிக்க, ஒதுக்கும்படி குறிப்பிட்டிருந்தனர். அதற்குப் பதிலளிக்கையில், மடாலய மந்திரி மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார்.

ஆனால், கிருஸ்தவர்கள், தாங்கள் ஓர் கோயிலை ஏற்படுத்தினால், அந்தக் கோயிலின் ஒரு பகுதியிலேயே, கோயிலைக் காட்டிலும் சிறப்பாக ஓர் கட்டிடத்தை எழுப்பி, நடமாடும் கோயில்களாகிய குழந்தைகளுக்குக் கல்வியறிவைப் போதிக்கின்றார்கள். அக் கோயிலின் வருமானத்தின் பெரும் பகுதியை, பாமர மக்களுக்குக் கல்வி புகட்டுவதற்குப் பள்ளிக்கூடங்களுக்குச் செலவிடுகிறார்கள்.

கல்விக்கும் கடவுளுக்கும் வித்தியாசம் பாராட்டாமல் தாயுமானவர் கூறியபடி "அறிவே தெய்வம்" என்பதற்கிணங்க, அறிவையும் தெய்வத்தையும் ஒன்றாகக் கருதுகிறார்கள் கிருஸ்தவர்கள். ஆதலால்தான் கிருஸ்தவ சமுதாயம் பூராவும் 100க்கு 98 பேர் படித்தவர்களாக விளங்குகின்றார்கள். ஆனால் இந்துக்கள் எனப்படும் சமுதாயத்தில், இந்துக் கோயில்களை வைத்துக்கொண்டு, அவைகளில் கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்துக்கொண்டு 100க்கு 86 பேர் படியாமல், இந்துமக்கள் பாமரர்களாய்க் காட்சியளிக்கின்றார்கள். அதற்குக் காரணம் இந்துமதத் தலைவர்களும், மடாதிபதிகளும் கோவில் வேறு, அறிவு வளர்ச்சிக்கான படிப்பு வேறு என்று வித்தியாசத்தைப் பாராட்டி வருவதாகும். இந்த உண்மையை உணராது மடாலய மந்திரி, கோவில் சொத்தைக் கொண்டு பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் கட்டுவது நல்லதல்லவென்று கூறியது மிக மிக வருந்தத்தக்கதாகும். இத்தகைய மந்திரிகளை வைத்துக்கொண்டு தற்போதைய ஆட்சியில் நமது மாகாணத்தில் கல்வி முன்னேற்றம் எவ்வாறு சாத்தியமாகும் என்று நமக்கு விளங்கவில்லை.

அதோடு நிற்காமல் அவர் நகரசபை முக்கியஸ்தர்களை ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் வைபவத்தைப் பற்றிப் பிரசாரம் செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகிறார். ஒரு நகரசபையின் வேலை மக்களின் சுகாதாரத்திற்கும் கல்வி வளர்ச்சிக்கும் பாடுபடுவதல்லாது ஆண்டவன் பிரசாரம் செய்வதல்ல. இவர்தான் இப்படிக் கூறியிருக்கிறார் என்றால், இவருடைய பிரதம மந்திரியாகிய திரு. ராஜாஜி அவர்கள் பள்ளிக்கூடமே தேவையில்லை, பெற்றோர்களே அவரவர்கள் பிள்ளைகளுக்குப் பாடம் போதித்தால் போதுமென்கிறார். சென்னை மாகாணத்தில் 500 பேர்களுக்குமேல் வசிக்கும்படியான

4000 கிராமங்களில் பள்ளிக்கூடங்களே கிடையாது. 500க்குக் குறைவான ஜனத்தொகை உள்ள கிராமங்கள் பல ஆயிரக் கணக்கில் இருக்கின்றன. 6 வயது முதல் 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் சுமார் 80 லட்சம் நமது மாகாணத்திலிருக்க, அதில் 40 லட்சம் சிறுவர்களே படிக்கின்றார்கள். இவ்வளவு மோசமான நிலையில் கல்வி வளர்ச்சி நமது நாட்டில் குன்றியிருக்க, பாடசாலை தேவை யில்லை என்கிறார் ராஜாஜி. அவர் கூறும் கருத்து அடிப்படையிலே தவறு. நமது மாகாணத்தில் படித்தவர்கள் என்று சொல்லக்கூடிய வர்கள் 100க்கு 14 பேர். அதில் நன்றாகப் படிக்கத் தெரிந்தவர்கள் 4 பேர். அப்படியிருக்க, பெற்றோர்களில் பெரும்பாலோர் படியாத வர்கள் என்பதை ஏன் ஆச்சாரியார் உணரவில்லை என்பது நமக்கு விளங்கவில்லை. அதோடு நிற்காமல் மக்களைத் தங்கள் தங்கள் மதக் குறிகளை—"**பட்டை நாமங்களை**"—பரக்க வெட்கப்படாமல் போட் டுக்கொள்ள வேண்டுமென்று பிரசாரம் செய்கிறார் (குறிப்பாக வைணவர்களை).

இப்படி நாட்டை ஆளவந்த மந்திரிமார்கள் பொது ஸ்தாபனங் களில் பேசுகிறபோது, மதப் பிரசாரம் செய்வதில் அதிகம் ஈடுபட் டிருக்கிறார்களேயொழிய மக்களின் முன்னேற்றத்திற்காக, சிந்தித்து செயலாற்றுபவர்களாகத் தெரியவில்லை. இவர்கள் இருக்கவேண்டிய இடம் மடங்களும், கோயில்களுமேயொழிய ஆட்சிப்பீடம் அல்ல என்பது வெளிப்படை. இவ்வித மந்திரிமார்களைக் கொண்டு இனி நாட்டில் பள்ளிக்கூடங்களும், ஆசிரியர்களின் முன்னேற்றமும் நாட் டில் ஏற்படாது என்பது தெளிவாகத் தெரிகிறது.

சென்னை மாகாணத்தின் மொத்த வருமானம் 60 கோ
ரூபாய். அதில் 12 கோடி ரூபாய் கல்விக்காகச் செலவழிக்க படு
கிறது. அதில் 7 கோடி ரூபாய் ஆரம்பக் கல்விக்காகச் செ பிடப்
படுகிறது. அந்த 7 கோடியில் 5 கோடி ரூபாய் எய்டெட் ரம்பப்
பாடசாலைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இவ்வளவு செ வழிக்கப்
பட்டும், ஆரம்ப ஆசிரியர்க்கு ஆதாரச் சம்பளம் ரூ. 7க்குமேல்
இந்த அரசாங்கத்தினால் கொடுக்க முடியவில்லை. ல்நாடுகளில்
நாட்டு வருமானத்தில் மூன்றில் ஒருபங்கு அல்ல. பாதிக்குமேல்
கல்விக்காகச் செலவழிக்கப்படுகிறது. ஆனால் நம் டிலோ ஐந்தில்
ஒரு பங்குதான் செலவழிக்கப்படுகிறது. இலை ஆட்சியாளர்கள்
சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். பண என்று கிளிப்
பிள்ளையைப்போல் பேசிக்கொண்டு இருப்பதி பயனில்லை. பணம்
இருக்கும் இடத்தைத் தேடிப் பிடிக்க வே டும். சுமார் 60 கோடி
ரூபாய்க்குமேல் சென்னை மாகாணத்திலி து, வருமான வரியாக
வும், சுங்க வரியாகவும் மத்திய அரசா த்திற்குக் கொண்டுபோகப்
படுகிறது. அதில் ஒருபகுதி சுமார் கோடி ரூபாயை ஆரம்பக்

கல்வி வளர்ச்சிக்கென சென்னை மாகாணத்திற்கு வருடா வருடம் கொடுக்கும்படியாக மத்திய சர்க்காருடன் போராடி ஆட்சியாளர்கள் வாங்கவேண்டும். அதைச் செய்ய மனமில்லாமல், தைரியமில்லாமல் மதப்பிரசாரம் செய்துகொண்டிருந்தால், ஆண்டவனையும் கல்வியையும் பிரித்துப் பேசிக்கொண்டிருந்தால் நாட்டில் கல்வி வளராது. ஆசிரியர்கள் ஆதாரச் சம்பளத்தைக் குறைந்தது 50 ரூபாயாக ஆக்கப்படாவிட்டால் ஆரம்ப ஆசிரியர்கள் நாட்டின் கல்வி முன்னேற்றத்திற்குப் பணிபுரிய முடியாது. நாட்டில் கல்வி வளராத காரணத்தால் கடசிப் பிரதிகட்சிகள், சண்டைகள் மாத்திரம் அல்ல, குழப்பமும் அனுவசியமான புரட்சியும் ஏற்பட அரசாங்கமே விதை விதைப்பதாகும்.

நாட்டில் அறிவு குன்றியுள்ள காரணத்தால் விஞ்ஞானப் பாதையில் மக்கள் செல்லமுடியாமல், அஞ்ஞானத்தில் ஆழ்ந்து நாட்டில் நாளுக்கு நாள் பஞ்சம் வருமேயொழிய சுபிட்சம் ஏற்படாது. இதை ஆட்சியாளர்கள் கவனிப்பார்களா?

சென்னையில் நான்காவது மகா நாடு

1952 டிசம்பர் 29ந் தேதி சென்னையில் சுமார் 25,000 எயிடட் பாடசாலைகளை இம்மாகாணத்தில், நடத்தும் நிர்வாகஸ்தர்கள், மானேஜர்கள், ஆசிரிய மானேஜர்கள் மகாநாடு ஒன்றை நடத்த முடிவு செய்திருக்கின்றது. இத்தகைய மகாநாடு 1937 டிசம்பர் மாதத்தில் மூன்றுவதாகக் கூட்டப்பட்டது. அன்று நாட்டில் ஆட்சி புரிந்தது ஆங்கில ஆட்சி. அன்று பிரதமராயிருந்தவர், இன்று பிரதமராயுள்ள C. ராஜகோபாலாச்சாரியாரே ஆவர். அன்று நாம் கேட்டது ஆரம்பாசிரியர்களுக்கு உயர்வான அடிப்படை ஊதியம், அன்றிருந்த கல்விச் சபைகளை பலப்படுத்தி, அதிகாரத்தையும் அதிகமாகக் கொடுத்து, ஆரம்பக்கல்வி சம்பந்தப்பட்ட மட்டில் அரசியலார் அடிக்கடி தலையிடாமல், இருக்க வேண்டுமென்பதாகும்.

கல்வியிலாகா பொறுத்தமட்டில் (Divisonal Inspector of Schools) டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள் போன்ற அனுவசியமான அதிகாரிகளை ஏற்படுத்தி, பொது மக்கள் பணம் வீணுக்கக்கூடாதென்றும், கல்வியிலாகா டைரக்டர் ஓர் இந்தியராக இருக்க வேண்டுமென்றும் எடுத்துக் கூறினோம். ஆனல் அப்பொழுது இருந்த ராஜாஜி தன் ஆட்சியில் பலப்படுத்திக்கொள்ள, தன் கட்சியின் செல்வாக்கை வளர்த்துக்கொள்ள, இருந்த கல்விச் சபையை ஒழித்துவிட்டு தாலுக்கா வாரியாக, கல்விக் கமிட்டிகளை ஏற்படுத்தி, காங்கிரஸ் கட்சிக்காரர்களையும், தன் கையாட்களையுமே அந்தக் கமிட்

டிகளில் அங்கத்தினர்களாக அமர்த்திக் கொண்டார். அதன் விளைவு அந்தக் கமிட்டிகள் சரியான முறையில் வேலை செய்யாமல் மறைந்து விட்டன. அன்று முதல் இன்று வரையில் கல்வியிலாகா சம்பந்தப் பட்ட எல்லாப் பிரச்சினைகளும், அதிகாரங்களும் கல்வி அதிகாரி களுக்கே ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. கல்வி அதிகாரிகளும், கல்வி சம்பந்தப்பட்ட ஆசிரியர்களோ மானேஜர்களோ, அறிவாளிகளோ, அனுபவமுள்ளவர்களோ கல்வி முன்னேற்றத்திற்காகச் சொல்லும் முறைகளையும், வழிகளையும், சீர்தூக்கிப் பார்க்கமுடியாமல் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ள கல்வி மந்திரியின் கொள்கையின்படி, உத்திர வின்படி நடந்துகொள்ள கட்டுப்பட்டவர்களாகி விட்டார்கள்.

இதன் விளைவு நாட்டில் ஆரம்பக்கல்வி கிராமந்தோறும் வளரா மல் அன்று ஆங்கிலேய ஆட்சியில் இருந்த அளவே படித்தவர்கள் தொகை அதிகமாகாமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆசிரியர் களின் நிலையும் முன்னேற்றமடையாமல் இருக்கிறது.

அன்றிருந்த ராஜாஜிதான் இன்றும் பிரதம மந்திரியாயிருக்கின்றார். ஆனால் அன்றிருந்தது ஆங்கில ஆட்சி, இன்றிருப்பது மக்களாட்சி. அதனால் இன்று நாட்டின் நிலைமை முற்றிலும் மாறியிருக்கிறது.

கடந்த சட்டசபைக் கூட்டத்தில் ஆசிரியர் சார்பாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் ஒருவர், ஆரம்பாசிரியர்களின் சம்ப ளம் உயர்த்தப்பட வேண்டுமென்றும், ஆரம்பாசிரியர்கள் உயர்த்தப்பட வேண்டுமென்றும் வாதாடுகையில் ராஜாஜி பதிலளிக் கின்றார், "ஆசிரியர் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் ஆசிரியர்கள் குறைகளை மட்டும் பேசக் கூடாதென்றும், ஆசிரியர் களைக் காட்டிலும் மோசமான நிலையில் பல மக்கள் இருப்பதால் அவர்களைப் பற்றியும் ஆலோசிக்க வேண்டுமென்றும் சட்டசபையில் பொதுவாகப் பேசவேண்டுமேயொழியக் குறிப்பிட்ட தொகுதிகளைச் சேர்ந்தவரைப்பற்றிப் பேசுவது தகுதியல்ல என்றும் கூறி வாயடக்கி விட்டார். இதிலிருந்து ராஜாஜிக்கு ஆரம்பாசிரியர்களின் முன் னேற்றத்திற்கு, நாட்டில் ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கு, எவ்வளவு அக்கரை இருக்கிறதென்பதை வாசகர்களே சிந்திக்க வேண்டுகின் றோம். மதப் பிரசாரத்திலும், கட்சிப் பிரசாரத்திலும் இருக்கும் அக்கரை, நாட்டின் கல்வி வளர்ச்சியில் இல்லை. இத்தகைய பிரதம மந்திரி ஆட்சியில்தான் வெகு சிக்கலான சூழ்நிலையில் வரும் டிசம்பர் 29-ந்தேதி மகாநாட்டைக் கூட்டத் தீர்மானித்திருக்கின்றோம்.

நமக்கு நன்றாகத் தெரியும், ராஜாஜி ஆட்சிப் பீடத்தில் இருக் கும் வரை ஆரம்பாசிரியர்களுக்கான அடிப்படைச் சம்பள உயர்வோ, ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கான வழி வகையோ ஏற்படப் போவ தில்லை என்று. ஆனாலும் ஒரு சுதந்தர நாட்டின் ஆட்சியும் கட்சி

யும் மாறிக்கொண்டு வருமேயொழிய நிரந்தரமாக ஒருவரே ஆட்சியிலிருக்க முடியாது. இந்த உண்மையைப் பல சுதந்தர நாட்டின் சரித்திரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அதிலும் நம் நாட்டில் உள்ள ஆசிரியர்கள் முனைந்தால் ஆட்சிப் பீடத்தையே மாற்றி அமைக்க முடியும். அதற்கு சமீபத்தில் காஷ்மீர் ராஜ்யத்தின் பிரதமர் ஷேக் அப்துல்லாவே போதிய சான்றாகும். தோழர் ஷேக் அப்துல்லா ஓர் ஆரம்ப ஆசிரியர். அவர் அரும்பாடுபட்டுத் தன் நாட்டைச் சுதந்தர நாடாகமட்டுமல்ல, முடியாட்சியை ஒழித்துத் தன் நாட்டுக்கெனத் தனியாக ஒரு கொடியையும், தனிச் சின்னத்தையும், தனது உள் நாட்டு விவகாரங்களில் டில்லி மத்திய அரசாங்கம் தலையிடா வண்ணம் பல சலுகைகளையும், திட்டங்களையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றார்.

நமது இந்திய உபகண்டத்திலேயே இத்தகைய மாபெரும் வெற்றி ஓர் ஆரம்பாசிரியரால் காணப் பெற்றதென்றால், சுமார் 150,000 ஆரம்பாசிரியர்கள் உள்ள நம் மாகாணத்தில் நாட்டு மக்களின் கல்வி முன்னேற்றத்திற்கான, ஏழை மக்களின் வறுமையை ஒழித்து, நல்லதோர் ஆட்சியை அமைக்க நம்மால் அவசியம் முடியும், நமக்குள் ஒற்றுமையும், கட்டுப்பாடும், தியாக புத்தியும் நமக்குள் வளர்ந்துவருமானால்.

இந்த மாபெரும் எண்ணத்தை ஈடேற்றுவதற்கு முதற்படியாக இந்த மகா நாட்டைக் கூட்டத் தீர்மானித்திருக்கின்றோம்.

இந்த மகாநாட்டில் முக்கியமாக ஆட்சியாளர்களை அறை கூவிக் கேட்க வேண்டியது ஆசிரியர்களின் சம்பள உயர்வு மட்டுமல்ல, ஆரம்பாசிரியர்கள் தன்மான உணர்ச்சியுடன் பேச்சுரிமையும், எழுத்துரிமையும் பெற்று நாட்டின் கல்வி வளர்ச்சிக்கான. நல்லதோர் பணி செய்ய விரும்புகிறதா? அல்லது வெள்ளையன் ஆட்சியில் இருந்ததைப் போல் நாடு சுதந்தரம் பெற்றும், ஆரம்பாசிரியர்களை அடிமைகளாகத்தான் நடத்தவிரும்புகின்றதா? என்பதைத்தான் ஆட்சியாளர்களுக்கு அன்பாக எடுத்துக் கூறி தக்கதோர் பதிலை ஆட்சியாளர்களிடத்திலிருந்து எதிர் பார்க்கின்றோம்.

ஆரம்ப ஆசிரியர்களின் வாழ்க்கைநிலை உயராத காரணத்தால், அரசாங்கத்தைப் பல மகாநாடுகள் மூலமும், கூட்டங்களின் மூலமும், மகஜர் மூலமும் அரசாங்கத்திற்கு தங்கள் குறைகளை எடுத்துக் காட்டியும், அரசாங்கம் சற்றும் செவிசாய்க்காத காரணத்தால், மலையாளப் பகுதியிலுள்ள ஆரம்ப ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு துணிந்து தீர்மானித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டுப் பகுதியில் உள்ள ஆரம்ப ஆசிரியர்கள், ஒற்றுமை இல்லாத காரணத்தால்,

ஒன்றுபட்டு செயலாற்ற முடியாமல், பெரிதும் பாதிக்கப்பட்ட தனிப்பட்ட ஆரம்ப ஆசிரியர்கள் வடாற்காடு, மதுரைப் போன்ற பகுதிகளில் உண்ணு விரதத்தைக் கையாண்டு வருகிறுர்கள். இன்று ஆரம்ப ஆசிரியர்கள் உலகத்தில், பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டு, ஒருபுறம் சாத்வீக போராட்டமும், மற்றொருபுறம் நேரடியான, புரட்சிகரமான போராட்டமும் கைக்கொள்ள வேண்டிய அவசியத்தில் ஆரம்ப ஆசிரியர்கள் துரத்தப்பட்டிருக்கின்றுர்கள். இந்த நிலையில் ஆரம்ப ஆசிரியர்கள் மனம் திருப்பப்பட்டு விடுமானுல், நாடும் ஆட்சியும் என்னவாகும் என்பது நமக்கு விளங்கவில்லை. இந்த அளவிற்கு ஆசிரியர்களைக் கொண்டுவந்து விட்டதற்குக் காரணம், ஆட்சியாளர்கள் ஆரம்பாசிரியர்கள்பால் கொண்டுள்ள அலட்சிய புத்தியேயாகும். இத்தகைய மனக்குழப்பமுள்ள ஆரம்ப ஆசிரியர்களை வைத்துக்கொண்டு, ஆரம்பப் பாடசாலைகளை வெற்றிகரமாக எப்படி நடத்துவது என்பது பாடசாலை மானேஜர்களுக்குப் புரியவில்லை.

இதையெல்லாம் உணராது, தங்கள் உரிமைக்காகப் போராடும், பேசும் ஆசிரியர்களை, கம்யூனிஸட் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும், திராவிடக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும், நாட்டின் துரோகிகள் என்றும் புரட்சிக்காரர்கள் என்றும் நையாண்டி செய்து ஆட்சியாளர் துன்புறுத்துவதில் என்ன பிரயோஜனம்!

நாட்டிலுள்ள கட்சிகளின் கொள்கைகளும், பிரச்சாரங்களும் கல்வி உலகத்தில் புகக்கூடாது என்பதுதான் ஆரம்ப ஆசிரியர்களின் முழு எண்ணம்—நாட்டில் கல்வி நல்ல முறையில் வளர்ச்சிபெற வேண்டுமானுல். அதற்காகத்தான் ஆரம்பக்கல்வி சம்பந்தப்பட்ட மட்டில் அரசாங்கமோ, ஆட்சியாளர்களோ தலையிடாமலிருக்க ஜில்லாவாரியாக கட்சிச் சார்பற்ற கல்விச் சபைகளை ஏற்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இன்று பொதுமக்களின் பொதுவாக சம்மந்தப்பட்ட சட்டதிட்டங்கள், சட்டசபைகளில் பொதுமக்களின் பிரதிநிதிகள் தீர்மானிப்பதைப் போல, கல்வி சம்பந்தப்பட்ட, ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட, எல்லா விஷயங்களையும் ஜில்லாக் கல்விச் சபையில் ஆசிரியர்களால் விவாதித்து தீர்மானிக்க வேண்டும் என்பதே நமது கொள்கை. இந்த மகாநாட்டில் இத்தகைய கல்விச் சபைகளை அமைக்க அரசாங்கத்தை அதிகமாக வற்புறுத்தப்படும்.

ஆதலின் ஜில்லாவாரியாக, தாலுக்காவாரியாக எய்டெட் பாடசாலைகளை நடத்தும் ஆசிரிய மேனேஜர்களும், மேனேஜர்களும் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி இம் மகாநாட்டை வெற்றிகரமாக முடித்துத் தருமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

வேலைநிறுத்தம் செய்ய மலபார் ஆரம்ப ஆசிரியர் முடிவு

மலபார் ஜில்லா உதவிபெற்ற ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்து விட்டனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு கோழிக்கோட்டில் கூடிய மலபார் உதவி பெற்ற ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சங்கத்தின் காரியக் கமிட்டி செய்த முடிவின்படி வேலை நிறுத்த ஓட்டெடுப்பு நடைபெற்றது.

வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக 12138 பேர்களும், எதிராக 1387 பேர்களும் ஓட்ட ளித்தனர்.

வயநாடு உட்பட 8 தாலுக்காக்களிலுள்ள ஆசிரியர்கள் ஓட்டெடுப்பில் கலந்துகொண்டனர். (ஜனசக்தி 23-11-52)

குறிப்பு:—ஆசிரியர் சம்பளத்தை ரூ. 27-லிருந்து ரூ 30 ஆக மானேஜ்மெண்டை உயர்த்திக் கொடுக்கும்படி அரசாங்கத்தார் உத்தரவிட்டினர். சம்பளம் வசூலாகாத பாடசாலைகளில் அவ்விதம் கொடுக்க முடியாமல் பல பாடசாலைகள் மூடப் போவதாக மானேஜர்கள் தெரிவித்து விட்டனர். அதற்காக அரசாங்கத்தார் ரூ. 3 உயர்த்திக் கொடுக்க, மானேஜ் மெண்டைக் கட்டுப்படுத்தவில்லை. ஆனால் முன்னாள் மந்திரி சபை இந்த ரூ. 3 அரசாங்கம் உயர்த்திக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தனர். அந்த ஏற்பாடு புதிய மந்திரி சபையால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதன் விளைவே இந்த வேலை நிறுத்தம்.

ஹரிஜன ஆசிரியர் சாகும்வரை உண்ணாவிரதம்

மதுரை ஜில்லாபோர்டு காரியாலயத்தின் முன்பாக ஒரு ஹரிஜன ஆசிரியர் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளார். இவருடைய பெயர் அழகுமலை. இவருக்கு வயது 42 ஆகிறது.

விசாரணையின்றி வாத்தியார்களை ஒரு பள்ளிக்கூடத்திலிருந்து வேறு பள்ளிக்கூடத்திற்கு மாற்றக்கூடாது என்று அவர் கோரிக்கை தெரிவித்துள்ளார். இந்த ஆசிரியரை வேறு இடத்திற்கு மாற்றி உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தெரிகிறது. எனவே தன்னை விசாரணையின்றி வேறு இடத்திற்கு மாற்றியதை ஆட்சேபித்து இவர் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளார். மேலும் லீவு நாட்களுக்கு முழு சம்பளம் தரவேண்டுமென்றும், தம்மைப் பழைய இடத்திற்கே மாற்றவேண்டும் என்றும், இவ்வாறு முதலில் தம்மை விசாரணையின்றி மாற்றியது குறித்து சர்க்கார் பகிரங்க விசாரணை நடத்தவேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார். (தினத்தந்தி 5-11-52)

நம் நாட்டின் முன்னேற்றம்.

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, இராசபாளையம்

தபசில் வகுப்பினரும் (Scheduled castes and tribes) மற்றும் பிற்பட்ட வகுப்பினரும் (and other backward classes முதற்படியாக மற்றைய முன்னேறிய வகுப்பினரளவேனும் முன்னேறல் வேண்டும்; நம் நாட்டார் பலரும் மேலை நாட்டினரளவேனும் முன்னேறல் வேண்டும். இவற்றில் முந்தியது மிக மிக விரைவாக அமைவதற்குத் தக்கதாகவே நம் நாட்டின் நலமும் சிறப்பும் அமையும், பிந்தியதும் கூடியதாகும். பல கண்களாலான ஒரு சங்கிலியின் பலம், அதன் வலிவு குறைந்த கண்ணின் பலமேயன்றோ! அதுபோல் நம்மில் பெரும்பாலாராகிய அவர்களின் குறைவும் தாழ்வும், நம் நாட்டின் குறைவும் தாழ்வுமேயாகும்; ஆகலால் அவற்றின் நீக்கம் அவர்கள் அக்கறை மட்டுமல்லாமல் பிறர் கடமையுமாகும்.

முப்பதாண்டுகளுக்கு முன், இந்திய மந்திரியும் அரசப் பிரதிநிதியும் கண்டபடியேதான்—ஏன் பலதலைமுறைகளுக்கு முன்னிருந்ததற்கும் கேவலமாகத்தான், பிற்பட்ட வகுப்பினர் கண்டவர் கலங்கும் படியான தங்கள் தாழ்ந்த நிலைமையிலும் (pathetic content of the masses) திருப்தியடைந்தவர்களாகவும் முன்னேறவேண்டுமென்ற அக்கறை கொஞ்சமும் இல்லாதவர்களாகவும் இருக்கின்றனர். இப்படியாக, அவர்களைத் தங்கள் முன்னேற்றத்தில் அக்கறை கொள்ளச் செய்ய வேண்டிய வேலையும் செய்தாகவேண்டியதாயிருக்கிறது. அதற்காக, பிற்பட்ட வகுப்பினர் பிள்ளைகளைக்கொண்டு முன்னேறியவர் பிள்ளைகள் மாதிரி எங்களையும் படிக்க வைத்தால், பாடவைத்தால், நாங்களும் முன்னேறேமோ, நல்வாழ்வு வாழோமோ என்பன போன்ற முன்னேற்றக் கருத்துக்கள் ததும்பும் சிறுபகடிக்கூத்துகள் (farces) மூலம், பிற்பட்ட வகுப்பினரிடையே பெருங்கிளர்ச்சிகள் செய்தாக வேண்டும். (without the awakening of their mind, they cannot realise their condition and claim their due).

முன்னேறியவர்களில் பெரும்பாலார் தங்கள்பாடே பார்ப்பவர்களாகவும் சிலர் எரிகிற வீட்டில் பிடுங்கினதும் இலாபமெனத் திரிபவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களில் இனந்தெரிந்தவர்களேனும் நாட்டுப் பற்றென்றால், சிறை செல்வதும், பதவிக

ளைக் கைப் பற்றுவதும், பத்திரிகைகளில் அல்லது மேடையேறி தங்களையும் தங்கள் கட்சியையும் புகழ்ந்து பேசுவதும், பிறரைத் தூற்றித் திரிவதும் அவற்றை யெல்லாம் சமயம் வாய்த்த பொழுது தத்தம் நலனைப்பெருக்கிக்கொள்வதற்குப் பயன்படுத்திக் கொள்வதும் தான் யென்றெண்ணியிருப்பதை மறந்து-தம்முடன் வாழும் மக்களின் இன்ப துன்பங்களையும் தம்மதாகக் கருதி அவர்களுக்கு அன்புடன் உதவி வாழ்வதுதான் நாட்டுப் பற்றென்பதனை உணர்ந்து, அப்படி வாழத் தொடங்கும்வரை, நம் மக்கள்—பிற்பட்ட வகுப்பினர் துயரமும் ஒழியாது, நம் நாடும் முன்னேற முடியாது.

வயது வந்தவரெல்லாம் வாக்குரிமை பெற்றிருக்கும் இந்தக் காலத்தில், பிற்பட்ட வகுப்பினரிடையே இனத்துக்கு இனமும் ஒவ்வோர் இனத்துக்குள்ளேயும் இருந்துவரும் வேற்றுமைகளைப் பாராட்டாது ஒற்றுமைப் பட்டிருப்பின், நம் மாகாண மந்திரி சபையையே அவர்கள் அமைப்பதாக இருக்கும்; தங்கள் குறைகளை நீக்கவும் முன்னேற்றத்திற்கு வேண்டியன செய்து வரவும் நேரதாகவும் இருக்கும். தற்போதைய நிலைமையில், மந்திரி சபையில் அவர்களுக்கு இடமேனும் கிடைக்குமோ, கிடைத்தாலும் அதனைத் தக்கவாறு பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த முடியுமோ என்றும் ஐயுற வேண்டியிருக்கிறது.

மனுநீதியின் தீமை, சாதிவேற்றுமையை — அதன் உயர்வு தாழ்வை பரம்பரையாக்கியது மட்டுமல்ல; அதனின்றும் பிரிக்க முடியாத படி, பொருளாதார அறிவு வளர்ச்சி வேற்றுமைகளை இணைத்ததுமாகும் (a carefree superior class with ample leisure to preserve and develop its culture). முதல் வகுப்பினருக்கு நிரம்ப சாவகாசமும் அறிவை வளர்த்துவர பல சௌகரியங்களும் அமைத்திருக்க, இரண்டாம் வகுப்பினர்க்கு அறிவை வளர்க்க அவ்வளவு சௌகரியங்களில்லாது போனாலும், அதிகாரமும் வயிற்றுப் பாட்டை சங்கடமில்லாமல் கழிக்கக்கூடியதாக அமைத்தும், மூன்றும் வகுப்பினருக்கு அவ்வளவு சௌகரியங்களில்லாது போனாலும் விளைந்தாலும் விளையாது போனாலும் நடந்து வரக்கூடிய வாணிபத்தால் காலங்கழிக்க வைத்தும், நான்காம் வகுப்பினர்க்கு சில வேலைகளை ஒதுக்கியிருப்பதிலும் விளைந்த காலத்தும் உழைப்பிற்குப் போதிய ஊதியமில்லா அடிமை வாழ்க்கையை விதித்துமிருப்பதேயாகும். தபசில் வகுப்பினர் தமிழ் நாட்டில் ஐந்தாம் வகுப்பினராகக் கருதப்பட்டு வந்தனர். நான்காம் வகுப்பினருக்கு இருந்த சௌகரியங்கள் கூட அவர்களுக்கிருந்ததில்லை. இந்தக் கட்டுகளெல்லாம் குலைந்து மாறி வருகின்றன; என்றாலும்,

வேகம் போதாது; சாதி வேற்றுமைக் கொடுமைகள், பெரும்பட்டினங்களில் வேண்டுமென்றால் கொஞ்சம் தளர்ந்து வருவதாகச் சொல்லலாமேயன்றி பிற இடங்களைப் பற்றி அவ்வளவு கூடச் சொல்லுவதற்கில்லை. நாகரீக வாழ்விற்கும் அறிவு வளர்ச்சிக்கும், நல்ல பரம்பரையும் (heredity), நல்ல சுற்றுப் புறமும் (environment), தன் முயற்சியும், பிறர் உதவியும், போதிய வசதியும் (leisure), குற்றம் குறைந்து குணம் மேவிடும் அன்பர் உறவு (நலமிக்க நல்லாரிணக்கம்–பண்புடையாளர் தொடர்பு) வேண்டும் என்பர். வறுமையிலேயே பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் (with traditions of poverty going back for centuries) பிற்பட்ட வகுப்பினரின் இடையே விளக்கமில்லாப் பிள்ளைகளும் ஆகாவழிப் பிள்ளைகளுமே மிகுந்திருக்கக் காண்கிறோம். தபசில் வகுப்பினரின் சேரிவாசமும் மற்றும் பிற்பட்ட வகுப்பினரின் தனித்தனி தொகுதி வாசமும் தங்கள் தங்கள் வகுப்பினரிடையே பல தலைமுறைகளாக நீடித்துவரும் நிலைமையில் நல்ல சுற்றுப்புறமும் இதுவரை வாய்த்ததில்லை. தன் முயற்சியும் மிகக் குறைவு; பிறர் உதவி–அரசாங்க உதவியும் மிக மிகக் குறைவு; அதனைப் பெற்றுப் பயன்படுத்தும் ஆர்வமும் அதனினும் குறைவு என்றே சொல்லவேண்டும்; ஆதலால், சுற்றுப்புறம் கட்டாயம் மாற வேண்டும்; அதன் மூலமாகவும், முயற்சி கூடவேண்டும்; அப்படியானால், அடுத்த தலைமுறையிலேனும் பிற்பட்ட வகுப்பினர் பிள்ளைகளும் முன்னேறிய வகுப்பினர் பிள்ளைகள் மாதிரி விளங்கக்கூடும்.

நம் நாட்டில் அதுவும் தமிழ் நாட்டில் சாதி உதவாதென்று பேசுவதெல்லாம் தெரியாத்தனமான பேச்சேயாகும். சாதி வேற்றுமை கருதாமல், முன்னேறிய வகுப்பினரும் பிற்பட்ட வகுப்பினரும் சம்பந்தம் காணும் வரை, சாதி வேற்றுமை நம் நாட்டில் இருந்தே தீரும். அது பிற்பட்ட வகுப்பினர் முன்னேறி வரவரத்தான் நிகழ்தல் கூடும்; இரண்டொரு நாட்களில் ஆண்டுகளில் முடிகிற காரியமில்லை. இது சமயம் பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்ற வேலைகள் செய்து வருவதற்கான அமைப்பு (ready made organisation) சாதியன்றி வேறெதுவுமில்லை. அது படித்தவர் படியாதவர், பணக்காரர் ஏழை என்ற வேற்றுமைக்கிடந்தராது எவர்க்கும் பற்றுக்கோடாகவும் இருந்து வருகிறது. அது போல் வேறோர் அமைப்பு· பல சாதியினர்க்கும் பொதுவான அமைப்பு, பல சாதியினரும் பற்றுக்கொள்ளக்கூடிய அமைப்பு— வாய்க்கும்வரை தனித்தனி சாதியினராகவும் தான் முன்னேற்ற வேலைகள் செய்து வரக்கூடும். அப்படியொரு அமைப்பு வாய்க்கும் வரை சும்மா இருத்தலும் முடியாது. கூடாது. முன்னேறி

பிருக்கும் சாதியினரெல்லாம், பச்சை பச்சையாக வெளிக்குத் தோன்றும் படியாகச் சொல்லாது, செய்யாது போனாலும், சாதிப்பற்றாலும், கட்டுப்பாட்டாலும் முன்னேறியிருக்க, முன்னேறிய பின்னும் அவற்றை விடாது கடைப்படித்து வர, பிற்பட்டவர்கள் சாதிக் கூட்டங்கள் கூடிப் பேசுவதில், செய்வதில் தவறொன்றுமில்லை யென்பது மட்டுமல்ல; தலைக்கு மேல் வெள்ளம் போய்க் கொண்டிருக்கிற இந்தக் காலத்திலும், அப்படிக் கூடி வேண்டியன விரைவாகவும் விடாப்பிடியாகவும் செய்து முன்னேறுமல் தூங்கிக்கொண்டிருப்பார்களென்றால் அதனைப்போல் இழிச்ச வாய்த்தனமாக வேறெதனையும் சொல்லுவதற்கிராது.

தபசில் வகுப்பினரும் மற்றும் பிற்பட்ட வகுப்பினரும் பெரும்பாலும் இன்னும் பயிர்த் தொழிலையே தங்கள் தொழிலாகக்கொண்டிருக்கின்றனர். பயிர்த்தொழிற் கூலியாட்களெல்லாம் — பாடுபடுபவர்களெல்லாம் அவர்களாகவே யிருக்கின்றனர். பணக்காரர் பயிரிடும்பருத்தி, கரும்பு, வாழை, புகையிலை, மிளகு, மிளகாய் தவிர்த்த மற்றும் பயிரெல்லாம்—உணவுப் பயிர்களும், மிச்சம் தருவனவாக இல்லை. அவை மிச்சந் தருவனவாக மாறுதவரை, அவர்களைப்பிடித்த வறுமைச் சனியனும்;சோர்வும் அவர்களை விட்டகலா, முன்னேற்ற வேலைகள் செய்யவும் முடியா, பலியா. ஆதலால், அவை விரைவில் மிச்சந் தருவனவாக மாறவேண்டும். அவர்களில் ஐந்தில் இரண்டு பங்கேனும் பயிர்த்தொழிலையே கைவிட்டு மற்றும் தொழில்களில் அமரவேண்டும். அப்பொழுது தான், பயிர்த் தொழிலிலும் வயிற்றுக்குப்போதிய கூலிகிடைத்தல் கூடும். அவர்களில் தபசில் வகுப்பினர், பல சாதியினரும் நெருங்கி மரியாதையாகப் பழகி வருகிற இருப்புவழி நிலயம், அஞ்சலகம், மருத்துவசாலை, பாங்கு, வாணிபத்துறைகள் முதலியனவற்றில் பெருவாரியாக அமர்தல்வேண்டும் அப்பொழுது தான் கீழ்மையுணர்ச்சியும் (inferiority complex) அவர்களை விட்டகலும்.

ஐந்தாண்டுத் திட்டம் முதலிய பல திட்டங்களும் கூறும் பயிர்த்தொழிற் பெருக்கம், குடிசைத் தொழில் முதலியன — அவை கிராமங்களில் (village level) செய்யப்பட வேண்டியன ஆயிற்றே என்றெண்ணியேனும், கிராம வாசிகளின் போக்கை — மனப்பான்மையை (psychological aspect)ப் பின் பற்றியேனும் இன்னின்ன குடிசைத் தொழில்களை இப்படியிப்படியுள்ள கிராமங்களில் கையாளலாம் எனக் கண்டறிந்தேனும் (practical experience) சொல்லப்படாத காகிதத்திட்டங்களாக —ஆகாயப் பஞ்சாங்கங்களாகவே இருக்கின்றன. அவற்றின் குறிக்கோளை—முடிவை எப்படியடைவதென்பதே இப்பொழுது ஆராய்ந்து, தெளிந்து கொள்ளவேண்

டியதாக இருக்கிறது. (The present problem is one of discovering the best means of attaining the objective) கிராமங்களில் செய்யவேண்டிய வேலைகளை அங்கங்கே வேலை செய்பவர்களே, கிராம வாசிகளுடன் கலந்து செய்யவேண்டியனவற்றை ஒருவாறு உருவாக்கிக் கொண்டு வேலைகளைத் தொடங்கிப் பின் ஒரு பலிதமான திட்டம் அமையும் வரை இன்றியமையாத் திருத்தங்களைச் செய்துகொண்டே போகவேண்டும்.' (There is no sovereign remedy for Rural poverty. Improvement will depend on simultaneous and persistent conscientious work in varied spheres) சில்லறை வரவிற்கான (supplementary income) சிறு தொழில்களை புதிதாகக் கையாளத் தொடங்குவதிலும் பெருவரவிற்குரிய பயிர்த் தொழில், நெசவு முதலியனவற்றின் வரவைப் பெருக்கும் ஆராய்ச்சிகளையே முதற்கண் கையாளத் தொடங்கல் வேண்டும்; பயிர்த் தொழில் திருத்தங்களை, நல்ல விளைவிற்கான தண்ணீர், குழை, குப்பை முதலிய வசதிகள் நிறைந்த இடங்களில் முதற்கண் தொடங்கி, அதன் பின்னரே அவ்வசதிகளையுங் கூட்டியபின் பிற இடங்களில் தொடங்கல்வேண்டும். மற்றும் சௌகரியங்கள் அமைந்திருப்பினும் கிராம வாசிகளின் மனப்பான்மைக்கேற்ற குடிசைத் தொழிலே பலிதமாதல் கூடும். பொருளாதார வேலைகள் தொடங்கிய பின் இனி வறுமைப்பிணி நீங்கிவிடக் கூடும் என்றெண்ணும்படியான நிலைமையில் தொடங்கும் முதியோர் கல்வி, மதுவிலக்கு, சுகாதாரம் முதலியனதான் கொஞ்சமேனும் பலிதமாதல் கூடும். Economic services should procede other social services. இவற்றையெல்லாம் மனதில் வைத்தே எந்தச் சமூகத் தொண்டுச் சங்கமும் தன் வேலைகளைச் செய்தல் வேண்டும்.

பணம் பத்துஞ் செய்யும், பாதாளம்வரை பாயும்; பணமில்லாதார்க்கு இவ்வுலகமில்லை; பணக்காரர் எக்குலத்தவராய் எந்நாட்டாராயிருப்பினும் அவர் நல்முறையில் பணந்திரட்டியவராகவும் பிறர்க்குதவுபவராகவும் இருப்பின், வேறெதனையும் கருதாமல் உலகம் அவரைப் போற்றுகிறது. நாம் சிக்கனமாக வாழ்ந்து நம் வருவாயில் ஒரு பாகத்தைச் சேர்த்துவரத் தொடங்கின், அப்படிச்சேரச் சேர பின்னும் பணம் சேர்க்க அது நமக்கு ஊக்கம் அளிக்கிறது; அப்படிக்கில்லாது, நம் வருவாய்க்குக் கூடுதலாக தலைப் புரட்டுக்கொண்டு செலவழிக்கத் தொடங்குவோமாயின் நம்மை விரைவில் ஓட்டாண்டியாக்கி நம்மைச் சந்தி சிரிக்கவும் செய்திடுகிறது; மேலும் வறுமை வறுமையை வளர்க்கும்; ஆதலால் ஏழைகள் அனைவரும் பணக்காரர் ஆதல் வேண்டும். ஐந்துவிரலும்

ஒன்றுபோலிருக்கிறதா? எல்லோரும் பணக்காரர் ஆதல் முடியுமா? என்று ஒரு வீண்வழக்குத் தொடுக்கின்றனர். அவர்கள் சொல்லுவதன்கருத்தைஊன்றிப் பார்ப்பார்களென்றால், அப்படிச் சொல்லமாட்டார்கள். ஐந்து விரலும் ஒன்றுபோலில்லைதான்; ஆனால் கட்டைவிரலும் ஓரங்குலம், ஒன்றரையங்குலம் இருக்கிறதல்லவா? அதுபோல் எவரும் தம் குடும்பத் தேவைக்குப் போதிய வரவுள்ளவராக—பணக்காரராக இருக்கலாமல்லவா? அப்படியே கூட்டுறவு நாடுகளாகிய தென்மார்க்கு, பின்லாந்தில் இருக்கிறார்களே! அந்தநாடுகளில் வேண்டுமென்றால், முதலாளித்துவ நாடுகளிலிருப்பது போல பெரும்பணக்காரர்கள் கிடையா. பெரும்பணக்காரர்கள் எதற்கு? நம் நாட்டிலும் நாளைக் கென்செய்வோம் என்று ஏங்கித் திரிகிற ஏழைகளில்லாதிருந்தால் போதாதா? நாமெல்லோரும் உழைத்துத் தின்னவேண்டுமென்றே நம் கைகளும் வயிறும் அறிவுறுத்திக் கொண்டிருக்கின்றன. தான் உழையாமல் அல்லது சொற்ப உழைப்பில், பிறர் உழைப்பால் பிழைக்கிற பெரும்பணக்காரர்கள் இருந்தாவதென்ன? முடிவுகாலத்தில், அவர்கள் பணம் அவர்களுக்குமே உதவாமல் அவர்களைத் தவிக்க விட்டு விடுவதையும் பார்க்கிறோம்! பிற்பட்ட வகுப்பினங்கள் பலவற்றில் பல தலைமுறைகளாகப் பணக்காரர் கிடையாது; மற்றும் சில வகுப்பிலும் அவர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைந்தேயிருந்து வந்திருக்கிறது. எல்லாரும் செல்வரை செய்வர் சிறப்பு. ஆதலால் பிற்பட்ட வகுப்பினர் பிறரால் மதிக்கப்படவேண்டுமென்றால், அவர்களெல்லாரும் பணக்காரராதல்வேண்டும்; திரைகடலோடியும் திரவியம் நெறிதவறாமலும் நாணயம் மரியாதைக்குப் பங்கமின்றியும் தேடல் வேண்டும்.

முன்னேற்ற வேலைகள் செம்மையாக நடைபெறுவதற்கு நல்ல சூழ்நிலை (proper atmosphere) வேண்டும். எங்கும் எவரிடமும்—அரசாங்கத்திலும் ஆட்சிக்கழகங்களிலும் தலைவர்கள் முதலாளிகளிடத்தும் தொழிலாளிகளிடத்தும் உண்மையும் உறவும், நன்மையும் நேர்மையும், அன்பும் ஆதரவும் திகழல்வேண்டும்; ஏழைக்கிரங்கும் மனப்பான்மையும் மிளிரல்வேண்டும் கட்டாயம் வலுவந்தம் கூடா. ஊதாரித்தனத்தால் நடைப்பிசகால், சூதாட்டத்தால், குடியால் தன்னிலைகுலைந்து சீரழிபவன் அதனைத் தானே உணர்ந்து (பிறர் இலேசாக எடுத்துக் காட்டலாம். எடுத்துக் காட்டுதலால் பயனிராது) தானாகவே செம்மைப்படல்வேண்டும். அதுவே நிலைக்கும், நீடிக்கும். ஒருவர்க்கொருவர் உண்மையாகவும் நன்மையாகவும் அன்பு பெருக வாழ்வதற்குத் தடையாயிருப்பனவெல்லாம் தவிர்க்கப்படல் வேண்டும். பிறரைக் கருத்துவேற்றுமைக்காகப்

பழித்தலும் பகைத்தலும் கூடா. சட்டத்தை அலட்சியம் செய்ய—மீறத்தூண்டுவனவும் கள்ள வாணிபத்தையும் இலஞ்சப் பேயையும் வளர்ப்பனவுமான கட்டுப் பாடுகள் எல்லாம் (all controls and prohibitions)- உணவுப்பொருள் கட்டுப்பாடுகளும், ஒழியவேண்டும்; தளர்த்தப்படவேனும் வேண்டும்; சட்டத்தை மீறத்தூண்டுவதோடமையாது கேடு குறைந்த கட்குடியைக் குறைத்து, சீமைச் சாராயக் குடியினும் கேடுமிகுந்த நாட்டுச் சாராயக் குடியைப் பெருக்கியிருக்கும் மது ஒழிப்பும் ஒழியவேண்டும். தொழிற்சாலைகளின் அமைப்பு தொழிலாளிக்கும் அக்கறைக்கிடமிருக்கும்படியாக மாறுதல் வேண்டும். விளைபொருள்கள், செய்பொருள்கள் பெருகவேண்டும்; அவை தாராளமாக சந்தைக்கு வரவேண்டும், கிடைக்கவேண்டும், நல்ல கூலியும் கிடைக்கவேண்டும். எவ்வளவு வரவு வந்தாலும், அதற்கு மேலும் கடன் வாங்கியும் கடன் சொல்லியும் செலவழிப்பது நிற்கவேண்டும். குறைந்தவரவேயானாலும், எதிர்பாராத இக்கட்டுகளுக்கு கொஞ்சம் மீதப் படுத்தியே வரல்வேண்டும்.

"நம் நாட்டின் உணவுக்குறைவாலும் உடைக்குறைவாலும் உறைவிடக் குறைவாலும் மக்கள் நேரடியாகப்படும் துயரத்திற்கு அளவில்லை. அவற்றை நீக்கி அடிப்படையைப் பலப்படுத்தியே மேல் செல்லுதல் வேண்டும்; அவற்றை விரைவாகவும் செய்தாதல் வேண்டும். அப்படிக்கில்லையேல், அக்குறைகளால் வளர்ந்துவரும் உண்மை நேர்மைக் குறைவும், ஒற்றுமை ஒப்புரவுக்குறைவும், நல்லெண்ணம் நல்ல ஆசைக் குறைவும், கள்ள வாணிபமும் இலஞ்சப்பேயும், பிறர்வாழப் பிடியாமையும், மிதப்பும் எதிர்ப்பும் எளிதில் மீட்க முடியாத அளவிற்கு நம் நாட்டைக் கெடுத்துவிடும். பிறநாடுகளில் படக்காட்சிகள் அறிவையும் நன்னெறியையும் வளர்ப்பதுபோல, நம் நாட்டுப் படக்காட்சிகளும் நமக்குதவுதல் வேண்டும். படக்காட்சிகளுடன் நாடகங்களும் கதைகளும் சமரச சமய அறிவையும் யாவரும் கேளிரென உடன்பிறப் பண்பையும் (brotherly feelings) பரப்பிவரல் வேண்டும். பள்ளிகளில் "நம்மையெல்லாம் காப்பாற்றிவரும் கடவுள் ஒருவரே; அவ்வொருவரையே நாம் பல பெயரிட்டழைக்கிறோம். அவர் நம் தகப்பன்; நாம் அவர் மக்கள்" (Father hood of God & brotherhood of man); நாமொவ்வொருவரும் ஒருவருக்கொருவர் அன்பாக உதவிவரல் வேண்டும்; அப்படி உதவாது, கடவுளுக்கன்பு செய்தலாலும் பயனில்லை; அப்படி உதவி வருவதால், அவருக்கும் நாம் அன்பு செய்தவரேயாவோம்" என்ற கருத்துக்கள் இளவயதிலேயே பதியாது போனால், பின் பிறர்பால் அன்பு செலுத்தலும் பிறர்க்குதவுதலும் அமையா.

இப்படியாகப் பொருளாதாரத் திருத்தம் மட்டுமல்ல; பழக்க வழக்கத் திருத்தங்களுமாதல் வேண்டும்; பிற்பட்ட வகுப்பினர் மட்டுமல்ல, முன்னேறியவர்கள் மனப்பான்மையும் திருந்தவேண்டும்; தத்தம் நலமே பெரிது பிறர் எக்கேடு கெட்டாலென்ன? பிறரைக் கெடுத்தும் தாம் வாழ்ந்தால்போதும் என்றெல்லாம் நினைக்கிற நினைப்பும், தத்தம் கருத்தே பெரிது, தத்தம் கட்சியே பெரிது, தாமே பெரியவர்; பிறரெல்லாம் தம்சொற்படியே நடக்கவேண்டும் என்கிற நினைப்பும் நிரம்பிய நம் நாட்டில், பேச்சே பெரியவேலையாகச் சொற்போர் தொடுத்துத் திரியும் தொண்டர்கள் நிரம்பிய நம் நாட்டில், அவற்றையெல்லாம் காலஞ்செல்லச்செல்ல மாற்றக்கூடிய தான ஆரவாரமில்லா, ஓயா, சலியா, சமரசவேலைகள் விரைவாகத் தொடங்கப்படல்வேண்டும். வாழ்க்கையைக் கெடுக்கும் பொருளாதார மந்தம், பயிர்த்தொழிலையே முதற்கண் தாக்குகிறது; அது கழிகிற காலத்திலும், கடைசியாகத்தான் அவர்களிடையேயிருந்து கழிகிறது. அதாவது, நாட்டில் பிறரெல்லாம் நல்வாழ்வு வாழத்தொடங்கிய பின்தான் நிலத்தையே தஞ்சமாக வாழ்பவன் வாழத்தொடங்குகிறான். பயிர்த்தொழிலைப் போல், கீழ்த்தரமான தொழில்! வெயிலிற்கா, மழைக்கா, பனிக்கா, எதற்கும் பின்னடையாமல் சிலவேலைகளில் இரவு பகல் தூக்கமுமில்லாமல் நடுநிசியிலும் வேலை செய்து தீரவேண்டியதான தொழில்! உழைப்பிற்குப் போதிய ஊதியமில்லாத தொழில்! அல்லல்களுக்கெல்லாம் ஆட்படுத்தும் தொழில்! வேறெதுவுமில்லை. என்றாலும், வியாபாரிகள் சங்கம், முதலாளிகள் சங்கம், தொழிலாளிகள் சங்கம் என்றெல்லாம் இருக்கிறமாதிரி பயிர்த்தொழிலாளர் சங்கம் என்றில்லை.

அஃதில்லாது போனாலும் போகட்டும். தோட்டத்தில் பாதி கிணறு என்றாற்போல, நாட்டில் முக்கால் வாசிக்கு மேலாகவிருக்கும் பிற்பட்டவர் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதற்காக வேணும் ஒரு சங்கம் வேண்டாமா? முன்னேறியவர்கள் அவர்களுக்குதவ (to lift up the people who are submerged under centuries of obscurity, to help them to find themselves and be freed from their position of indignity–Tagore). முன்வரவேண்டாமா? அப்படி உதவினாலும் உதவாவிட்டாலும், அழுதழுதாலும் பிள்ளை அவள்தானே பெறவேண்டும்; தன்கையே தனக்குதவி என்றபடி தாங்களாகவேனும் தங்களாலியன்ற அளவு அந்த வேலைகளைத் தொடங்கல்வேண்டும்; விரைவாகவும் தொடங்கல்வேண்டும். ஓயாது, சலியாது தம்மாலியன்ற அளவு உழைத்துவரல்வேண்டும்; உதவி வேண்டி கிளர்ச்சியும்

செய்துவரல்வேண்டும். நியாயம் அவர்கள் பக்கம் இருக்கிறது; பெரும்பாலராகவும் அவர்கள் இருக்கிறார்கள். ஆதலால் அவர்களால் மஞ்சள் குளித்துவருகிற—வாழ்ந்துவருகிற பிறரும் அரசாங்கமும் போகப்போக வேணும் உதவுவர். அவர்களின் முன்னேற்றத் தேரும் விரைவில் அசைந்து தேரோடும் தெருக்களிலெல்லாம் ஓய்யாரமாக ஓடி பத்தாண்டுகளுக்குள் இல்லையெனினும் ஒரு தலைமுறைக்குள்ளேனும் நிலயம் வந்து சேரும்.

இக்கருத்தை உட்கொண்டே, இராசபாளையம் திருவள்ளுவர் சமூகத்தொண்டுச் சங்கம் தொடங்கப்படுகிறது இப்படியே பலதொகுதிகளிலும் சங்கங்கள் ஏற்பட்டு அவற்றிற்கெல்லாம் மேலாகத் தமிழ்நாட்டில் அவற்றின் வேலைகளையெல்லாம் செம்மைப்படுத்தவும் புதுப்புது வேலைகளைச் செய்யத் தூண்டவும், வழிகாட்டவும் ஒரு மேற்பார்வைச் சங்கமும் ஒரு வார வெளியீடும் இருக்குமென்றால், சிறுகச்சிறுகவும் முன் பின்னாகவும் வேலை தொடங்கினாலும் போகப்போக எல்லாத் தொகுதிகளிலும் வேலை தொடங்கிப் பெருகிவரவும் பயனளிக்கவும் கூடும்.

"ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

94–95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை, 1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்	(ஆங்கிலம்) 100 ரூ. 2–8
ரிகார்ட் ஷீட்டுகள்	(ஆங்கிலம்) 100 ரூ. 2–0
பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்	(ஆங்கிலம்) 100 ரூ. 2–0
பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள்	(ஆங்கிலம்) 100 ரூ. 1–0
வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள்	(ஆங்கிலம்) 100 ரூ. 2–0

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

முன்னேற்றப் பாதையில் ஆசிரியர்கள்

எஸ். ஜி. வாமனமூர்த்தி, ஆசிரியர், ஆரியகலாவித்யாசாலை,
எமனேஸ்வரம், P. O., (via) பரமக்குடி, S. I. Ry.

முன்னேற்றமா? ஆசிரியர்களுக்கா? ஏணிக்கும் தோணிக்கும் ஒப்பிடும் எங்களுக்கா? என்று ஆச்சரியப்படலாம். ஏற்றமில்லாது, மாற்றமில்லாது, முன்னேற்றமில்லாது, சிலைகள்போல் நிலைமாறாது இருப்பவர்கள் ஆசிரியர்கள் என்று உபாத்தியாயர்கள் கூறுவது மட்டுமல்ல, உலகமே கூறுகிறது. அதிருஷ்ட தேவதையின் அருள் கிடைத்தாலும், உடல் வருந்தி உழைத்தாலும் பணம் பெற முடியாத உயர்ந்த பதவி உபாத்தியாயர் பதவி என்பது யாவரும் உணர்ந்த உண்மை. ஆம். முன்னேற்றமேயில்லாதவர்களுக்கு, முன்னேற்றமடைய வழியேயில்லாதவர்களுக்கு முன்னேற்றத்தில் நம்பிக்கை இருப்பதில்லை; இருப்பது சாத்தியமில்லை.

வாழ்க்கையே வறண்ட பாலைவனமாகி வறுமையில் வாடிக்கொண்டிருக்கும்பொழுது, சிந்தனைக்குத் தடைபோட்டு அதை மீறினால் அரசாங்கம் சிறைச்சாலையில் அடைக்கத் தயாராயிருக்கும்பொழுது, குழந்தைகளோடு கொஞ்சிக் குலாவி விளையாடி குழந்தைகளாகி வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட அஞ்சும்பொழுது எப்படி இருதயத்தில் முற்போக்கு எண்ணங்கள் முளைத்தெழும்? அதுமட்டுமல்ல, முயற்சி, முன்னேற்றம், வெற்றி என்றால் வேடிக்கையாயிருக்கும்; கற்பனைத் திட்டமாயும் காட்சியளிக்கும். ஆனால் வாழ்க்கையை வளமாக்கி, வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலையாக்குவோம் என்று விரதம் பூண்டுவிட்டால், நிச்சயமாக வழிபிறக்கும்; வெற்றி கிட்டும்.

இச்சமயத்தில் எவ்வளவு முயற்சித்தாலும் நமக்குச் சம்பள உயர்வு சாத்தியமில்லை என்று எண்ணி முற்போக்கு எண்ணங்களைக் கைவிட்டு விடுவதை நான் விரும்பவில்லை. முயற்சிக்கு, ஓயாத முயற்சிக்குப் பலன் உண்டு. முயற்சியின்மை அவமானப் படவேண்டிய விஷயம். ஏழ்மையைப் பழிப்பது தவறு. ஆனால் முயற்சியற்ற ஏழையைப் பழிப்பதில் தவறில்லை. ஏனெனில் அவனுடைய ஏழ்மைக்கு அவனே காரணம். "பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்(து) ஆள்வினை யின்மை பழி" என்பது ஒரு திருக்குறள் வெண்பா. விதியில்லாமை மனிதனுடைய குற்றமல்ல. ஆனால் செய்யவேண்டிய முறைகளையறிந்து காரியங்கள் செய்யாமை, அதாவது அறிவுடன் கூடிய முயற்சியின்மை, மனிதனுடைய

குற்றம் என்று வள்ளுவர் கூறுகிறார்.

சமர்களுங் கஞ்சோம்; சாதிப்போம்; சிறுமையைக் களைவோம்; சீர்திருத்துவோம்; பெருமையை அடைவோம் என்று ஆசிரியர்கள் வைராக்கியத்துடன் காரியங்களைச் செய்ய ஆரம்பித்து விட்டால், மக்கள் அலட்சிய மனப்பான்மையை ஒதுக்கி விட்டு அதிக மரியாதையுடன் ஆசிரியர்களை வரவேற்பார்கள். பின் ஏணிமேல் ஏறலாம்; தோணியையும் கடக்கலாம்; "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்" என்பது எங்கும் நடைமுறையில் காட்சியளிக்கும்.

"செய்வன திருந்தச் செய்" என்ற பழமொழிக்கிணங்க, ஆசிரியர்களாகிய நாம் ஏற்ற பொறுப்பை எல்லோரும் பாராட்டும் அளவுக்கு நிறைவேற்றப் பாடுபட வேண்டும்; ஆட்சியாளர் வலிய வந்து வணங்கும்படியான அளவுக்கு ஆற்றல் ஆசிரியர்களிடத்தில் இருக்கவேண்டும்; இப்பொழுதுள்ள இழிநிலை ஒழிந்து இன்பமயமான தன்மான நிலை ஏற்படவேண்டும் என்னும் நோக்கத்துடன்தான் நான் இக்கட்டுரையை வரைகிறேன். உழைப்பாளிகளுக்கு உழைப்புக்கேற்ற ஊதியமில்லாம லிருக்கும் பொழுது, "மக்களே! நாட்டின் வளம்பெருக சலியாது உழையுங்கள்!" என்று கூறும் அளவுக்கு உல்லாசபுரியில் வாழும் அதிகாரிக் கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல நான். நமக்குப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் வேண்டாமா? அப்படியானால் நாம், கல்வி, உரிமை, ஊக்கம், ஒழுக்கம், ஒற்றுமை இவைகள்தான் நம்மைப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்லும் அடிப்படைச் சக்திகள் என்பதை உணரவேண்டும்.

இன்றைக்கு ஆசிரியர்களுக்குச் சம்பளம் மாத்திரம் குறைவாகக் கொடுக்கப்படுகிறது, மற்றவர்களுக்குக் குறைவில்லை என்று யாராவது எண்ணினால் அது மகத்தான தவறு. இன்றைய சர்க்கார் ஆசிரியர்கள் முன்னேற்ற மடையாதபடி எல்லாத் தடைகளையும் விதித்து வைத்திருக்கிறது. குறிப்பாக, எழுத்துரிமை, பேச்சுரிமைத் தடையால் ஆசிரியர்கள் பள்ளிக்கூடம் என்னும் அறைக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்; உண்மை உலகத்தின் தன்மை உணராதபடி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அரசியல் சட்டத்தில் கூறப்பட்டபடி, நமது குடியரசு சர்க்கார் எல்லாப்பிரஜைகளுக்கும் எழுத்துரிமை, பேச்சுரிமை, சமவசதிகள், சமசந்தர்ப்பங்கள் அளிக்க விரும்புகிறதானால், முதலில் ஆசிரியர்களுக்கு இருக்கும் எழுத்துரிமை, பேச்சுரிமை சம்பந்தமான எல்லாவித தடைகளும் நீக்கப்படவேண்டும். எழுத்துரிமை, பேச்சுரிமைபெறல் ஆசிரியர்களுடைய முன்னேற்றத்தின் முதற்படிகள் என்பதை அனைவரும் அவசியம் உணரவேண்டும்.

ஆதிகாலத்தில் கல்வியின்மீது மதம் ஆதிக்கம் செலுத்தியது. இன்று அரசியல் ஆதிக்கம் செலுத்துகிறது. கல்வியில் ஜீவன் வேண்டும், தரம் உயர வேண்டும், தன்னம்பிக்கை வேண்டும், ஒழுக்கம் வேண்டும் என்று கதறுவதில் பிரயோஜனமில்லை. அரசியலார் தாங்கள் ஆசைப்படும் திட்டங்களையெல்லாம் புகுத்தி பரிசோதனை செய்வதில் பலன் கிடைக்கப் போவதில்லை. அதனால் படிக்க வரும் மாணவர்கள்தான் பாதிக்கப்படுவார்கள். திடீர் திடீர் திட்டங்கள் விளைவிக்கும் தீமையைப் பற்றி வருங்கால சந்ததிகள்தான் உணரும். ஆசிரியர்களைக் குறை கூறுவதில் பயனில்லை. ஏதோ ஒரு சிலர் வகுத்த கல்வித் திட்டங்கள் திணிக்கப்படுகின்றது. அவர்களுக்குக் கல்வி முறையில் எவ்வளவு பயிற்சியுண்டு; தன்னலமற்ற தன்மையுண்டு; திறமையுண்டு; அனுபவமுண்டு என்பதெல்லாம் கவனிக்கப்படுவதில்லை. அக்கல்வித் திட்டம் எல்லாச் சூழ்நிலைகளுக்கும் பொருந்துமா என்பது ஆலோசிக்கப்படுவதில்லை. இது குறிப்பாக, ஆரம்பக் கல்விக்கு மிகவும் பொருந்தும். இன்றைய ஆரம்பாசிரியர்கள் சட்டத்தின் அடிமைகள். கல்வியின் குறைகளைக் கண்டு ஆசிரியர்களைப் பழிப்பதில் பயனில்லை; நியாயமில்லை; சட்டம் சர்வாதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கும்பொழுது ஆசிரியர்கள் கல்வி முறையை அமைக்கவேண்டும்; நிர்வாகம் செய்யவேண்டும். அப்பொழுதுதான் ஆசிரியர்களுக்குத் தொழிலில் ஊக்கம் ஏற்படும்; உழைப்புக்கு இடமிருக்கும்; கல்வியின் தரம் உயரும். ஆகவே, ஆசிரியர்களுக்கு முன்னேற்றம் வேண்டுமானால், கல்வியின் மீதுள்ள அரசியலார் ஆதிக்கம் நீக்கப்படவேண்டும். அதற்கு ஆசிரியர்களுக்கு எழுத்துரிமை, பேச்சுரிமை வேண்டும். இல்லையேல் ஆசிரியர்களின்மீது சுமத்தப்படும் பழிகள் அதிகரித்துக் கொண்டே போகும்; ஆசிரியர்களுக்கு விமோசனமில்லாது போய்விடும்.

எழுத்துரிமை, பேச்சுரிமை பெறவும், பெற்றால் அதைத் திறம்பட நிர்வகிக்கவும், ஆசிரியர்களுக்குக் கல்வி, ஊக்கம், ஒற்றுமை மிக்க அத்தியாவசியமாகத் தேவை. இவைகளையடைவதில்தான் ஆசிரியர்களுடைய முன்னேற்றம் உருவாகிறது என்பது என்னுடைய அனுபவ பூர்வமான கருத்து. நாம் வாழ்வது கல்விக்கூடத்தில் என்பதை நினைவில் இருத்திக் கல்வியில் சிறப்பான தேர்ச்சியடையவேண்டும். நம்மிடத்தில் கல்வியைத் தவிர வேறு எதுவும் கிடையாதென்பதையும், அதுவே நமது ஆயுதம் என்பதையும் ஆசிரியர்கள் நன்கு அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். வருங்கால நாட்டில் திறமைக்குத்தான் இடமிருக்கப் போகிறது. ஜாதிக்கோ, சர்டிபிகேட்டுக்கோ, அல்லது சிபார்

(22-ம் பக்கம் பார்க்க)

நாமும் அவர்களும்

1955 MADRAS

(G. சுந்தரம், துவக்கப்பள்ளி, தணிக்கலாம்பட்டு.)

உலகம் தோன்றி 300 கோடி ஆண்டுகளாகின்றன வென்பது சரித்திராசிரியர்கள் செய்த ஆராய்ச்சியின் முடிவு. 'கல் தோன்றி மண் தோன்றா முன்பே தோன்றிய தமிழகம்,' அறிவிலும், நாகரிகத்திலும் மேம்பட்டிருந்தது என்பது புதைபொருள் ஆராய்ச்சியின் வாயிலாய்க் காணக் கிடைத்த உண்மையாகும். உலக அரங்கிலே இன்று தாழ்ந்து கிடக்கும் தமிழ் நாடு, அன்று இமயத்தில் இலச்சினை பொறித்து, வெளி நாட்டில் வீரப் போர் புரிந்து, வெற்றிக் கொடி நாட்டிக் கொண்டிருந்தது. நம் தங்கத் தாய் நாட்டின் சங்க நூற்கள், மங்காது ஒளிவிடும் மாணிக்கங்களாய் மிளிர்கின்றன. வள்ளுவர் வாழ்ந்த நம் வனப்பு மிக்க நாட்டில் வற்றாத ஆறுகளும், வளங்கொழிக்கும் சோலைகளும், வானமளாவிய மலைகளும், வளையாத கடற்கரையும் இருப்பதால், வறுமையிலா நிலையும், வாட்டமற்ற தன்மையும் இருந்தன வென்று பழம்பெருந் தமிழ் நூற்களினின்றும் நாம் அறிகின்றோம். அத்தகைய அருமந்த நாட்டிலே தான் ஆசிரியர்களாகிய நாம் அவமானச் சின்னங்களாக உலவுகின்றோம்.

2. நம் பணி.

எதிர்காலப் பிரஜைகளை இளமையிலேயே பயிற்றுவித்து ஈடும் எடுப்பு மற்ற அறிஞர்களாக்குவதே நம் பணி. அறிவோவியம் செதுக்கும் சிந்தனைச் சிற்பிகள் நாம் எழுத்தறிவிப்பதால் இறைவனெனப் போற்றப்படுபவர்கள். 'அன்ன சத்திரம், ஆலயம் முதலியவைகளைக் கட்டும் புண்ணியத்தைவிட கோடிப் புண்ணியம் கொடுக்கவல்லது எழுத்தறிவிப்பது. உலகப் பொது மறையை வகுத்துத் தந்த வள்ளுவனின் வழித் தோன்றல்கள் நாம். கோவைச் சீமான்களையும், ஆர்க்காட்டு அறிஞர்களையும், சேலம் ஜாலக்காரர்களையும், ஈரோட்டுப் பாதைகளையும் தோற்றுவிக்கும் உற்பத்தி இயந்திரங்கள் நாம். அறியாமையும், மூட நம்பிக்கையும் கைகோத்துலவும் நம் நாட்டில் பகுத்தறிவுப் பகலவனை உலவ விட்டுப் பஞ்சைகளையும், பணக்காரர்களையும் பகுத்தறிவு மணிகள் தரும் வளமுள்ள வயல்களாக்கும் காரண காரிய கர்த்தாக்கள் நாம்.

நம் சென்னை மாகாணத்தில் சுமார் 113 இலட்சம் குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் படிக்கும் வயதுள்ளவர்கள் சுமார் 80 லட்சம். இதில் தற்போது படிப்பவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 40 லட்சம் ஆகும். இதிலிருந்து இன்னும் கல்வி வயதுள்ள பிள்ளைகளில் 50 சத விகிதத்தினர் பள்ளிக் கூடங்களை

எட்டிப் பார்க்காமலேயே இருக்கின்றதென்னும் உண்மை தெற்றென விளங்குகின்றது. இது நம் சுதந்திர ஆட்சியின் இன்றைய காட்சி. சுமார் 1,80,000 ஆரம்ப ஆசிரியர்கள் நம் சென்னை மாநிலத்திலே பணி புரிந்து வருகிறார்கள்; இல்லை, இல்லை கூலி வேலைசெய்து தங்கள் குடலைக் கழுவி வருகிறார்கள். இந்த பரிதாபத்துக் குரிய மாபெரும் சமூகத்தின் இன்றைய நிலைமையைக் கவனித்தால் நெஞ்சு நெக்கு விடும்; உள்ளம் குமுறும்; உடல் நடுங்கும். அரசாங்கத்தின் கீழ்த்தர சிப்பந்திகள் பெறும் ஊதியத்தை விட குறைவான ஊதியத்தை நாம் பெற்று வருகிறோமென்றால், ஆட்சியாளர்களின் அலட்சிய மனப்பான்மை இதற்குக் காரணமா அல்லது ஆசிரியர்களின் அடிமைத் தனம் இதற்குக் காரணமா?

ஆசிரியர்கள் படும் அவஸ்தைகளை, அவல நிலையைக் கண்டு, முன்னேற்றக் கட்சித் தலைவர் முத்துராமலிங்கத்தேவர் முழக்கமிட்டார் அன்று: 'அரசாங்க சபையிலே அமர்ந்திருக்கும் அமைச்சர்களே! அரசாங்க ப்யூன்களைவிட குறைவான ஊதியம் பெறும் ஆசிரியர்களின் சம்பளத்தைக் கூட்டித்தர அரசியலாருக்கு எண்ணமுண்டா! என்று. கிடைத்த பதிலோ, பழைய கீறல் விழுந்த கிராமபோன் ரிகார்டான 'ஆலோசிக்கிறோம்; ஆவன செய்கிறோம்' என்பதுதான். ஆனால், இன்று வரை எந்த விதமான நடவடிக்கையும் எடுத்ததாகக் காணோம்.

1552–53 வரவு, செலவு திட்டப்படி கல்விக்காக நம் மாகாணத்தில் செலவிடப்படும் தொகை 12 கோடிதான். மொத்த வருமானத்தில் $\frac{1}{5}$ பாகந்தான் நம் பாரத தேவி பக்தர்களால் கலைமகள் கூடங்களுக்குச் செலவிடப்படுகிறது என்பது மட்டுமல்ல நாம் கவனிக்க வேண்டியது; இந்த 12 கோடியும் சரியான

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

சுக்கோ அல்ல. ஆகையால் ஆசிரியர்கள் அவரவர்களுக்குப் பிரியமுள்ள கலைகளில் அல்லது இயல்களில் நல்ல தேர்ச்சியடைய வேண்டும்; ஆசிரியர்களைக் கேவலப்படுத்தும் சொல்லையும், செயலையும் கண்டித்துத் தடுக்க ஊக்கத்துடன் முயலவேண்டும்; ஆசிரியர்களின் நன்மைக்காகச் செய்யப்படும் காரியங்கள் அனைத்திலும் அனைவரும் ஒற்றுமையாகக் கட்டுப்பாடுடன் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும்.

என்னுடைய யோசனையை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஒவ்வொருவரும் சிந்தனை செய்யுங்கள், சிந்தனை காட்டும் பாதையில் செல்லுங்கள் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். ஆசிரியர்களாகிய நாம் ஆராய்ச்சி காட்டும் முன்னேற்றப் பாதையில் சென்று, வருங்கால இந்தியாவில் வளமுடன் வெற்றி ஒளிதிகழ வாழ்வோமாக.

முறையில் செலவிடப் படுகிறதா வென்றால், நடைமுறை கல்வித் திட்டத்தின் குறைகளும், ஆசிரியர் பெறும் குறைவான ஊதியமும் அப்படி நடைபெறவில்லை என்றே கூறுகின்றன. இந்த நிலையில் அறியாமையை நம் நாட்டை விட்டு ஓட்டுவது முயற் கொம்பே. பறட்டைத் தலையையும், பஞ்சடைந்த கண்களையும், குனிந்த நடையையும், குன்றிய உடலையும், வளர்ந்த தாடியையும், கிழிந்த உடைகளையுங் கொண்ட இந்நாட்டு மகேஸ்வரனும், மன்னனுமான ஆசிரியனின் சம்பளத்திலே ஐந்து ரூபாய் கூட்டிக் கொடுக்க ஆட்சியாளர்கள் அஞ்சுகிறார்கள் என்றால் இந்நாடு உருப்படுவ தெந்நாளோ. கெஞ்சுகிறோம் நாம். வஞ்சினம் கூறுகிறார்கள் அவர்கள். கஞ்சிக்கின்றிக் கஷ்டப்படுகிறோம் நாம். மஞ்சத்தில் படுத்துக்கொண்டு பஞ்சப்பாட்டுப் பாடுகிறார்கள் அவர்கள். சாதாரண உணவை உண்டு வரும்போதே இவர்கள் கொடுக்கும் சம்பளம் பத்துப் பதின்மூன்று நாட்களுக்குள் சரியாகி விடுகிறதென்றால் இந்த ஆட்சி சமதர்ம ஆட்சி; ஏழைப் பங்காளராட்சி; ஜனநாயக ஆட்சி என்று அவர்கள் அடிக்கடி சொல்வதை நாம் திரும்பத் திரும்பக் கேட்டு எப்படி நம்புவது?

ஓநாயும் ஆட்டுக் குட்டியும் ஒத்து வாழாது! புலியும் பசுவும் ஓர் குளத்தில் தண்ணீர் குடிக்காது! கீரியும் பாம்பும் சந்தித்தால் சிறுவதையே நாம் காண்கிறோம். இந்த நிலையிலேயே நாமும் அரசியலாரும் இருக்கிறோமென்றால் மிகைபடக் கூறுதல் என்று சொல்ல முடியுமா? அவிஞ்சி லிங்கனார் முதல் கிருஷ்ணராவ் வரை ஆசிரியர்களின் அந்தகார வாழ்வுக்கு யாராவது ஒளி தந்திருக்கிறார்களா 'வென்றால் அதுதான் இல்லை. ஏன்? அவர்களே இருண்ட வீட்டிலிருப்பதாகக் கூறிக்கொள்கிறார்களே. வசை புராணங்களையும், வாக்குறுதிகளையும், அறிவுரைகளையும் அபாய சங்கநாதங்களையும் அடுக்கடுக்காக அள்ளி வீசுவதில் எந்த அமைச்சரும் சளைத்தவராகக் காணப்படவில்லை. குமுறும் கும்பிக்குக் கூழ் கேட்டால் கொதித்தெழுகிறார்கள். வாழ முடியவில்லை. வதைபடுகிறோமென்றால் வசை மொழிகளை வீசுகிறார்கள். சீரழிந்த வாழ்வைச் செம்மை செய்யுங்கள் என்றால் சீறியெழுந்து செஞ்சட்டை கருஞ்சட்டைச் சேவகர்களாகிய உங்களுக்கா சம்பளம் உயர்த்துவோம் எனச் செப்புகிறார்கள். ஏங்கும் இந்தக் குடும்பத்தைத் தாங்குங்கள் என்று நாம் கூறினால் ஏழைகளைக் கண்டு திருப்தியடையுங்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள். கூரிய மதி படைத்த அமைச்சர்களே! எங்கள் குடும்பத்தைத் தாங்குங்கள் என்று நாம் கூக்குரலிட்டால் 'குரு' என்ற பட்டத்தினால் பெருமை யடையுங்கள் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

கஜானாவில் பணமில்லையெனக் கையை விரிப்பவர் ஒருவர்; வைவதற்கு வரிந்து கட்டும் வக்கீல் ஒருவர். உபதேசம் செய்யும் ஊருக்கு உபதேசி ஒருவர்: இந்த மாதிரி மாடல்களில்தான் நமக்குக் கல்வி மந்திரிகள் கிடைக்கிறார்களே ஒழிய பிரச்னைகளைப் புரிந்து உருப்படியான பதில்களைக் கொடுப்பவர் ஒருவராவது வரவில்லை. வக்காலத்து வாங்குபவர்களும், வசையம்புகள் எய்பவர்களும், வரப்பிரசாதம் கொடுப்பவர்களும், வானளாவப் போற்றுபவர்களும் நமக்குத் தேவையில்லை. பின் யார் தேவை! வாழ வழிகாட்டும் கல்வித் தலைவர்கள் தேவை! உரிமையைப் பகிர்ந்து கொடுக்கும் உத்தமர்கள் தேவை! ஏழ்மைக்காகப் பரிந்து பேசும் இருதயம் படைத்தவர்கள் தேவை! ஆசிரியர்களின் அல்லல்களைத் தீர்க்கும் அமைச்சர்கள் மிக மிகத் தேவை! அப்படிப்பட்டவர்கள் 1956-ஆம் ஆண்டிலாவது கிடைப்பார்களோ என்னவோ!

3. ஆசிரியர்களும் பாடத் திட்டங்களும்

இன்றைய சென்னை காபினெட் 'கல்வித் திட்டங்களில் ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமானால், கல்வி சம்பந்தப்பட்ட அதிகாரிகளையோ, ஆசிரியர்கள் சங்கங்களையோ, தமிழறிஞர்களையோ, புலவர்களையோ, கட்சித் தலைவர்களையோ கலந்தாலோசித்துச் செய்யும் பண்பு பெற்றதாகஇல்லை. அப்படி எந்தத் தனி மந்திரிக்காவது உண்டானாலும் கூட கட்சிப் பற்றினாலும், தான் என்ற பெருமையினாலும் அவ்வாறு செய்ய இசைவதில்லை. யதேச்சாதிகாரமாக அவர்கள் செய்த முடிவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், ஆசிரியர்களும் தவறு என்று சுட்டிக் காட்டும்போது அதைக் கேட்பதும் கிடையாது. 'நிர்மாணத் திட்டம்' என்ற பெயரால் கற்கால—உலோக கால மக்கள் வாழ்ந்த காலத்துக் கொத்த பாடத் திட்டங்களையும், செயல் முறைகளையும் தற்காலத்தில் பள்ளிகளில் புகுத்தி வீண் பண விரயத்தையும், பொருள் நட்டத்தையும் ஏற்படுத்துவதல்லாமல் ஆசிரியர்களின் பொறுமையையும், மாணவர்களின் திறமையையும் சோதிக்கிறார்கள். கட்சித் திட்டத்திலுள்ள 'மொழித் திணிப்பை'யும், ஆதாயமற்ற 'ஆதாரக் கல்வி'யையும், 'கதர் அபிவிருத்தி திட்ட'த்தையும் புகுத்தி மக்களின் உதாசினத்துக்கும் எதிர்க் கட்சித் தலைவர்களின் வெறுப்புக்கும் ஆளாகிறார்கள். வம்புக்காகப் புகுத்திய இந்தத் திட்டங்கள் வாபசாகும் நிலைக்கு வந்து விட்டது. இதற்கெல்லாம் காரணமென்ன? ஆசிரியர்களின் யோசனைகளை ஆசிரியர்களின் குரல்களான 'ஆரம்பக்கல்வி' 'பூங்கொத்து' முதலிய சஞ்சிகைகளின் யோசனைகளைக் கேட்காததால்.

கேவலம்! அந்த அற்ப ஆசிரியர்களின் அலறல்களை அமைச்சர்

ளாகிய நாங்கள் கேட்பதா? நாங்கள் அரசியல் தலைவர்கள்; ஆள்வோர்கள்; அறிஞர்கள்; ஆளப்பிறந்தவர்கள்; ஆண்டவனின் அவதாரங்கள்; நாங்கள் வைத்ததே சட்டம்; இட்டதே பிச்சை; என்று எண்ணும் ஏதேச்சாதிகாரப் போக்கு மந்திரிகளைப் பிடித்துக்கொண்டு ஆட்டுகிறது. ஆசிரியர்களை கேலிச் சித்திரத் திரையில் எழுதி ஆனந்தப்படும் விகட ஓவியர்களாக இன்றைய மந்திரிகள் மாறியிருக்கிறார்களென்றால் அது உண்மையல்லவென்று மறுக்க இயலுமா?

4. அரசாங்கமும் கட்சியும்.

அரசாங்கம் வேறு; அரசியல் கட்சிகள் வேறு என்ற மனப்பான்மை நம் நாட்டில் உண்டாகு மட்டும் எந்த உருப்படியான காரியமும் நம் நாட்டில் நடைபெறாது. நம் சென்னை மாகாணத்தில் எந்த இலாகாவை எடுத்துக் கொண்டாலும் 'கட்சிப் பிரசாரவேலை' தான் தீவிரமாக நடைபெறுகிறதே யொழிய மக்களுக்காக—அவர்களின் சுகத்துக்காக-சுபிட்சத்துக்காக—எந்த ஆக்க வேலையும் நடைபெறுவதாகக் காணோம். கல்வி இலாகாவிலும் கட்சிப் பிரசாரம் நடைபெறுகின்றது 'நிர்மாணத் திட்டம் என்ற பெயரால் கட்டாயக் கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது எங்கள் கட்சி! முதியோர் கல்வியை மூலை முடக்குகளிலெல்லாம் முழங்க வைத்தது எங்கள் மூத்த கட்சி! குடிசைத் தொழில்களைக் கோபுரத்துக்கேற்றியது எங்கள் அபாரக்கட்சி! வார்தா திட்டத்தை வாரி வழங்கி வறண்ட இந்த நாட்டை வளமாக்கிய கட்சி எங்கள் கட்சி என்று கட்சிப் பிரசாரம் செய்யும் அரசியல் மேதைகளையே இன்று நாட்டிலே காண்கிறோம்.

கல்வித் திட்டத்திலே கட்சியும், கட்சியிலே கடவுளும், அதைத் தூக்கி வைத்துக் கொண்டு நடனமாடும் ராஜர்களும் பஜகோவிந்தங்களும், பஜனை விரும்பிகளும் ராஜ நடைபோடும் காட்சிகளையே பார்க்கிறோம். ஆசிரம வாசிகள் ஆட்சித் தலைவர்களாகவும் மாளிகை மன்னர்கள் மக்கள் தலைவர்களாகவும் உலவும் காட்சிகள் நம் சென்னை மாகாணத்தின் நித்திய நிகழ்ச்சிகள்.

5. நாமும் அவர்களும்.

ஆசிரியர்களும் மனிதர்கள்; அவர்களுக்கும் வாயுண்டு; வயிறுண்டு; வளமாக வாழ உரிமையுண்டு; வலிமையுண்டு என்ற எண்ணம் மக்கள் மன்றத்திலே உலவும் நிலையை உண்டாக்க வீறு கொண்டெழுங்கள்! ஆசிரியத் தோழர்களே! வீழ்ந்த நம் சமுகத்தை வீர சமுதாயமாக்க வெகுண்டெழுங்கள்! நம்முடைய உழைப்புக் கேற்ற ஊதியம் கிடைக்காத நிலையை முறியடிக்க ஒன்று சேர்ந்து உரிமைக்குரலெழுப்புங்கள். "கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே" என்று

கொட்டுங்கள் முரசம். கேட்க வேண்டும் நமது குரல்கள் சென்னையில் தீப்பொறி பறக்கும்—தீர்மானங்கள் திக்கெட்டும் நிறைவேற்றுங்கள் அமைச்சர்களின் காதுகளில் ஒலிக்கட்டும். ஆசிரிய சமூகம் நினைத்தால் ஆட்சியின் அடிப்படையையே மாற்றி விடலாம்; மாற்றியும் காட்டுவோம் என அறிவுறுத்துங்கள். நாட்டிலே நடமாடும் பஞ்சப் புலியின் கொடூரப் பற்களில் சிக்கிச் சீரழியும் நம் சிதைந்த வாழ்வை விளக்கி முடங்கல் தீட்டுங்கள். தனித்துக் கிளம்பும் நமது குரல்களை, மாவட்டவாரியாகவும் மாகாண ரீதியாகவும் ஒன்றுக்கிப் புரட்சிக் குரலெழுப்புங்கள். நமது உரிமையைத் தடை செய்யும் 1280 ஐ உடைத்துத் தூள் தூளாக்கத் தொடை தட்டி நில்லுங்கள். 'முழந்தாளிட்டுக் கொண்டே வாழ்வதை விட நிமிர்ந்து நின்றபடி சாவது மேல்' என்று கூறிய இத்தாலிய வீரன் மாஜினியின் பொன் மொழிக்குப் புதுமெருகு கொடுங்கள். கோபுரத்திலிருக்கும் அந்தக் கோமான்கள் குப்பை மேட்டில் கிடந்துழலும் நம்மைக் கூட்டிக்கொண்டு போகும்படிச் செய்யுங்கள். இமயமலை முகட்டிலிருக்கும் அந்தச் சீமான்கள் இந்து சமுத்திரத்தில் மூழ்கித் திணறும் பரிதாப நிலையைப் போக்கும்படி செய்ய தூது செல்லுங்கள், 'வேடனிடமிருந்து மீட்டு வந்த புள்ளி மானை வேங்கையிடம் விளையாட விட்டது போலிருக்கிறது விடுதலையடைந்த இந்தியா' என்று ஒரு தமிழகப் போறிஞர் கூறியது போல வெள்ளையனிடமிருந்து மீட்டு வந்த நம் சுதந்திரத்தையும், சுபிட்சத்தையும் வேதனையில் விளையாட விடும் அரசியல் தலைவர்களின் கண்கள் திறக்க வல்ல ஒரு சூழ்நிலையை உண்டாக்குங்கள். 'மக்களை மடிய வைப்பவர்கள் மாளிகை வாசிகளே' என்று அன்று ரஷ்ய எழுத்தாளர் மாக்சிம் கார்க்கி சொன்னார். அதை மாற்றி ஆசிரியர்களை மடிய வைப்பவர்கள் ஆட்சியாளர்களே என்ற நிலைக்கு வந்து விட்ட தன்மையை ஒழிக்கக் கிளர்ச்சி செய்யுங்கள். 'உழைப்பின்றி உண்பவர்களைத் திருடர்கள் என்று தான் கூறவேண்டும்' என்று காந்தியார் கூறினார். நாட்டிலே உழைக்காமல் வாழ்பவர்கள் உல்லாச பவனி வருகிறார்கள். உழைக்கும் சமூகத்தினராகிய நாம் ஓட்டாண்டிகளாக இருக்கிறோம். நாமும் அவர்களும் நாட்டின் இருதுருவங்கள். இந்த நிலையை நீக்க விழித்தெழுங்கள்! வேங்கையென நில்லுங்கள்! ஆசிரியத் தோழர்களே! அகிம்சா முறையில் போராடுங்கள்!

வணக்கம்

புகழ்பெற்ற புத்தகவணிகரும், C. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் நிறுவியவரும் எலேட் அச்சக உரிமையாளரும் ஆகிய

உயர்திருவாளர் பெரியார்

M. துரைசாமி முதலியார்

அவர்கள்

வாழ்க்கைச் சுருக்கம்

புலவர் கோ. வில்வபதி. (தேர்வுக்குழு அமைச்சர், மாணவர் மன்றம், சென்னை.)

தோற்றுவாய் :

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்பது பொய்யாமொழியார் பொன்னுரை. அவர் மொழிக் கேற்ப நம் அருந்தமிழ் நாட்டில் தொன்று தொட்டு அறிவுடைப் பெருமக்கள் பலரும் திருவுடை வள்ளல்கள் பலரும், உழைப்பால் உயர்ந்த உத்தமர்கள் பலரும் தோன்றித் தம் பொன்றாப் புகழ் நிறுவிச் சென்றுள்ளனர். அத்தகைய பெரியார்களில் அண்மையில் மறைந்த நம் பெரியார் துரைசாமி முதலியார் அவர்களும் குறிப்பிடத் தக்கவராவர். அவர் எளிய நிலையில் தம் வாழ்க்கையைத் தொடங்கித் தம் உழைப்பாலேயே உயர்நிலையுற்ற பெரியாராவர். அவருடைய வாழ்க்கை வரலாறு எதிர்கால இளைஞர் தம் வாழ்வைச் சீர்திருத்தி அமைத்துக் கொள்வதற்குத் தூண்டு கோலாய் அமையும் என்ற நோக்கத்தால் சுருக்கமாகக் கூற முற்படுகிறோம்.

பிறப்பும் இளமையும் :

நம் பெரியார் துரைசாமி முதலியார் அவர்கள் மயிலை ஆறுமுக முதலியார் அவர்கட்கும், மனோன்மணி அம்மையாருக்கும் 1869-ஆம் ஆண்டு நவம்பர் நான்காம் நாளன்று மகனாய்த் தோன்றினார். இவருடன் பிறந்தவர்களில் மூத்த சகோதரி இலஞ்சி அம்மாள் அவர்கள். இளைய சகோதரர் பார்த்தசாரதி முதலியார் அவர்கள். இளமையிலேயே நம் முதலியார் அவர்கள் கூரிய அறிவும் உயர்குணங்களும் அமையப் பெற்று விளங்கினார். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்ற பழமொழிக் கேற்ப இவர், தம் இளம் பருவத்திலேயே தாய் தந்தையர் ஆதரவின்றித் தம் முயற்சியால் பொருளீட்டத்தொடங்கினார். இவ்வருங்குணம் பிற்காலத்தில் இவர் உழைப்பால் உயர்ந்த பெரியோராய்த் திகழ்வர் என்பதற்கு ஏற்ற அறிகுறியாக இருந்தது.

தொழிலும் வாணிகமும் :

நம் பெரியார் அவர்கள் பதினாறும் ஆண்டில் கோட்டையில் ஆறு திங்கள் பணியாற்றினார். அதற்குப் பிறகு அப்போது தங்கசாலை வீதியில் கமல விநா

யகர் கோயிலுக்கு அண்மையில் இருந்த கொண்ணூர் உலகநாத முதலியார் அச்சகத்தில் தொழில் புரிந்து வந்தார். சென்னைப் பச்சையப்பன் பள்ளிவாயிலில் சிறு குழந்தைகட்கு வேண்டிய அரிச்சுவடி, வாய்பாடு போன்ற புத்தகங்களை வைத்து விற்பனை செய்து கொண்டிருந்த பெரியார் கல்பட்டு குமாரசாமி நாயுடு அவர்கள், துரைசாமி முதலியார் உலகநாத முதலியார் அச்சகத்தில் உண்மை ஊழியராகப் பணியாற்றி வருவது கண்டு அவரைத் தம்மிடம் வேலைக்கு அமருமாறு வேண்டிக் கொண்டார். நம் முதலியார் அவர்கட்கும் வாணிகத்தில் பெருவிருப்பம் இருந்தமையால் அதற்கிணங்கி அச்சகத் தொழிலை விட்டுப் புத்தக விற்பனைத் தொழிலில் புகுந்தார். தொடக்கத்தில் இவருக்கு மாத ஊதியம் ரூபா ஏழுதான். நாள்தோறும் மாலையில் இவருக்கு அரையணா உற்சாகக் காசாகக் கொடுக்கப்பட்டது. நம் முதலியார் அவர்கள் நாள்தோறும் காலை 6 மணிக்கு மயிலாப்பூரிலிருந்து கட்டமுதுடன் தம் அலுவலகம் வந்து விடுவார். அங்குள்ள புத்தகங்களையெல்லாம் சுமந்து சென்று பச்சையப்பன் பள்ளியின் எதிரில் அப்போதிருந்த நாவல் மரத்தினடியில் அவைகளைப் பரப்பிவைப்பார்: வியாபாரம் தொடங்கும்; நம் முதலியார் அவர்கள் நாவன்மை படைத்தவர். யாவரிடமும் இனிமையாகப் பேசுபவர். ஆதலின் அவர் செய்து வந்த இப்புத்தக வாணிகம் சிறிது சிறிதாக வளர்ந்து வந்தது. மேலும் நம் பெரியார் அவர்கள் அக்காலத்திலிருந்த பிரபல புத்தக வியாபாரிகளிடமெல்லாம் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டு அவர்களோடு அளவளாவி எந்தெந்தப் புத்தகங்களை எங்ஙனம் பதிப்பித்தால் வாணிகம் செழிக்கும் என்று அறிந்து கொண்டு தம் முதலாளியுடன் கலந்து அம்முறைகளில் புத்தகங்களை அச்சிட்டுத் தம் வாணிகத்தை வளப்படுத்தினார்.

அச்சகம் நிறுவியமை :

இங்ஙனம் நம் துரைசாமி முதலியார் அவர்கள் வாணிகத்தை வளப்படுத்தியதுடன் அக்காலத்தில் சென்னையில் சிறந்து விளங்கிய இப்போதும் விளங்கி வருகின்ற மேக்மிலன் கம்பெனியாரோடு தொடர்பு கொண்டார். அக்காலத்தில் சிறந்த புலவராகவும் நூலாசிரியராகவும் விளங்கிய திரு. செல்வகேசவராய முதலியார் M. A. அவர்களின் உதவியால் அக்கம்பெனியின் நிர்வாகத்தை நடத்திவந்த மார்ஸ்டன் துரையின் பேரன்புக்குரியவரானார். நம் முதலியார் அவர்கள் ஆங்கிலப் பயிற்சி இல்லாதவராயினும் மார்ஸ்டன் துரையவர்களுடன் பழகி அளவளாவிப் பேசிப் பழகுவார். அவ்வாறு பேசும் பொழுது ஒருநாள் அவரிடம் 'அச்சுயந்திரம் கண்டுபிடித்தவர் யார்?' என்று வினவினார். துரையவர்கள் நம் முதலியாரின் பேரார்

வத்தைக்கண்டு வியந்து மகிழ்ந்து 'காக்ஸ்டன்' என்ற ஆங்கிலேயரோ அச்சகத்தைக் கண்டு பிடித்தார் என்று கூறினார். உடனே நம் பெரியார் அவர்கள் காக்ஸ்டன் பெயரால் ஓர் அச்சகம் நிறுவவேண்டும் என்று பேரா வல் கொண்டார். 'எண்ணிய எண்ணியாங்கெய்துப எண்ணியார்; திண்ணிய ராகப் பெறின்' என்பது அநுபவமொழியன்றோ? நம் முதலியார் அவர்கள் அன்று முதல் அரும்பாடுபட்டுச் சின்னாட்களில் ஜாண்டிக்கன்ஸன் அண்டு கம்பெனியின் ஏஜென்டாகி 'கோஸ்' என்பவரின் உதவியைக்கொண்டு அச்சு இயந்திரத்தை இங்கிலாந்திலிருந்து தருவித்துத் தாம் விரும்பியவாறு 'காக்ஸ்டன் அச்சகம்' என்ற பெயரால் அச்சகத்தை நிறுவினார்.

திருமணம் :

நம் முதலியார் அவர்கட்கு இருபத்து ஒன்பதாவது வயதில் திருமணம் நிகழ்ந்தது. ஸி. குமாரசாமி நாயுடு அவர்களே முன்னின்று திருமணத்தை நடத்தி வைத்தார். புழல். நாராயணசாமி முதலியாரின் மூத்த மகளாகிய **பாப்பாத்தி அம்மையார்** அவர்களே முதலியார் அவர்களின் வாழ்க்கைத் துணைவியாக அமைந்த நல்லாராவர். அம்மையார் அவர்கள் அருங்குணங்கள் பலவும் அமைந்து கற்புக்கடம் பூண்ட உத்தமியாராவர். இவ்விருவரும் நடத்திய இல்லற வாழ்வு இன்பவாழ்வாய் இலங்கியது. அம்மையார் அவர்கள் சுற்றம் ஓம்பி, விருந்தினர்ப் பேணி இல்லறவாழ்வை நல்லற வாழ்வாக நடத்தி வந்தார்கள். இவ்விருவர் தம் மங்கலவாழ்வின் மங்கலமாக மதுரைமுத்து, இரத்தினவேலு, இராஜவேலு என்ற ஆண்மக்களும், இரஞ்சிதம், நாகரத்தினம் என்ற பெண்மக்களும் தோன்றி முதலியார் அவர்களின் வாழ்வினை வளம்பெற்ற நல்வாழ்வாகச் செய்தனர்.

பாட புத்தகங்கள் வெளியீடு :

நம் பெரியார் அவர்கள் குடும்பப் பொறுப்பை ஏற்றது முதல் வாணிகத்தில் மேலும் கண்ணும் கருத்துமாகப் பாடுபட்டு வந்தார். எளிய புத்தகக் கடையாக விளங்கிய குமாரசாமி நாயுடு கடை, முதலியார் அவர்களுடைய உழைப்பின் ஆற்றலால் 'குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ்' என்ற பெயரில் பெரிய கம்பெனியாயிற்று, மாயூரம் S. A. இராமசாமி ஐயர் என்பவரைத் துணையாகக்கொண்டு சில நாவல்களை எழுதச் செய்து குமாரசாமி நாயுடு கம்பெனியின் மூலம் வெளியிட்டார். பின்னர் அப்போது திருப்பவல் உயர் பள்ளியில் தமிழாசிரியராக இருந்த தமிழ்ப் பேராசிரியர் **காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியார்** அவர்களுடன் நம் பெரியார் அவர்கட்குத் தொடர்பு ஏற்பட்டது. அவர் வாயிலாகத் 'திராவிட பாலர் பாடம்' முதல், பல பாட நூல்களை எழுதச் செய்து அப்போது பெரும்புலவராக

விளங்கிய காஞ்சிபுரம் மகா வித்துவான் இராமசாமி நாயுடு அவர்களைக் கொண்டும், தஞ்சை மாவட்டக் கல்வித்துறைத் தலைவராக (சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்) விளங்கிய திரு சே. சிவஞானம் பிள்ளை அவர்களைக்கொண்டும் திருத்தச் செய்து வெளியிட்டார். அப்புத்தகங்கள் புதிய முறையில் மாணவர்கட்குத் தகுந்த வகையில் அமைந்திருந்தமையால் மிகுதியாக விற்பனையாயின. அதனால் கம்பெனி வாணிகம் பெருகி வளர்ந்து வந்தது. பின்னர்த் தமிழ்ப் பேராசிரியர் நமச்சிவாய முதலியார் அவர்கட்கும், குமாரசாமி நாயுடு கம்பெனிக்கும் நிலையான தொடர்பை உண்டாக்கினார். முதல் வகுப்பு முதல் உயர்நிலைப்பள்ளி, கல்லூரி வகுப்பு வரையில் பயிலும் மாணவர்கட்கேற்ற வகையில் திருந்திய முறையில் சிறந்த தமிழ்ப்பாட நூல்களைப் பேராசிரியர் நமச்சிவாய முதலியார் அவர்களைக்கொண்டு எழுதச் செய்து வெளியிட்டனர். அப்புத்தகங்களின் சிறப்பால் தமிழ் நாட்டின் பெரும்பாலான பள்ளிகளில் அப்புத்தகங்களே பாட புத்தகங்களாக வைக்கப்பட்டன. அதனால் குமாரசாமி நாயுடு கம்பெனியும் செல்வத்திலும் செல்வாக்கிலும் சிறந்து தமிழ் நாட்டில் புகழ்பெற்ற புத்தகக் கம்பெனியாயிற்று.

சுற்றுப் பிரயாணம் :

நம் முதலியார் அவர்கள் அதனுடன் அமையாது அந்நாளில் பூவிருந்தவல்லி முருகேச முதலியார் அவர்கள் ஆங்கில மொழியில் தேர்ச்சியுடையவராயிருந்தமையால் அவரையும் குமாரசாமி நாயுடு கம்பெனியில் தொடர்புடையவராகச் செய்தார். அவர் மூலமாகவும் பல புத்தகங்கள் வெளியிடப்பட்டன. பின்னர்த் துரைசாமி முதலியார் புகழ்பெற்ற ஆங்கிலக் கம்பெனிகளுடன் தொடர்பு கொண்டு பச்சையப்பன் பள்ளிக்கருகில் ஒரு கிளைத்தாபனத்தை நிறுவினார். சீமையில் சிறந்து விளங்கும் பிளாக்கி அண்டு கம்பெனியார் தயாரிக்கும் நோட்டுப் புத்தகங்களை மொத்தமாகத் தருவித்துச் சென்னை மாகாணம் முழுவதற்கும் வாணிகம் புரிந்தார். காலியன்ஸ், நெல்ஸன் கம்பெனிகள் போன்ற பல கம்பெனிகளுக்கு ஏஜண்டாகவும் இருந்தார். தாம் செய்துவரும் வாணிக வளர்ச்சியைக் கருதி அவர் தென்னிந்தியா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து ஆங்காங்குள்ள புத்தக வியாபாரிகளுடன் தொடர்பு கொண்டு தம் கம்பெனியின் பாட புத்தகங்களையும் நோட்டுப் புத்தகங்களையும் பரவச் செய்தார். முதலியார் அவர்களுடைய ஆற்றலால் கடல் கடந்த நாடுகளிலும் வாணிகம் செழித்தது. முதலியார் அவர்கட்குக் குமாரசாமி நாயுடு கம்பெனியாரிடமிருந்த பேரன்பால் தம் மூத்த மகனையும் அக்கம்பெனியிலே வேலைக்கு அமர்த்தி 18 ஆண்டுகள் அக்கம்பெனியில் பணியாற்றுமாறு செய்தார்.

சொந்தக் கம்பெனி :

இங்ஙனமாக நம் பெரியார் அவர்கள் தம் 64-ஆம் வயது வரையில் கம்பெனியின் உயர்வே தம் குறிக்கோளாகக் கொண்டு பாடுபட்டு வந்தார். அந்நாளில் அவர் அறிவும் ஆற்றலும் வாணிக நுட்பமும் செல்வாக்கும் ஆகிய வைகளைத் தேடிக்கொண்டாரே யொழிய செல்வத்தைத் தேடிக் கொள்வதில் கருத்தைச் செலுத் தினாரில்லை. 1933 ஆம் ஆண்டு நம் பெரியார் அவர்களும், அவர் தம் மகனும் தம் உழைப்பால் வளர்த்த கம்பெனியிலிருந்து பிரிய நேர்ந்தது. ஓராண்டுக் காலம் ஒரு தொழிலுமின்றிக் கழிந்தது. 1934-ஆம் ஆண்டில் (6-6-1934) தமது பெயரா லேயே ஒரு சிறு அச்சுக் கூடத்தை நிறுவிப் புத்தக வியா பாரத்தையும் துவக்கினார். நம் முதலியார் அவர்களால் பல வழி களில் நன்மையடைந்த மதுரை யில் புகழ்பெற்ற புத்தக வியாபா ரியாகிய இ. மா. **கோபாலகிருஷ்ண கோனார்** அவர்களிடம் கடனாகப் பெற்ற 2000 ரூபாவே முதலி யார் அவர்கள் நிறுவிய கம் பெனிக்கு மூலதனம். அப்போது கோபாலகிருஷ்ண கோனாரின் கம்பெனியின் சென்னைக் கிளை யின் காரியதரிசியாக இருந்த **ம. ரா. அப்பாதுரைப் பிள்ளை** அவர்களும் இவ்வகையில் பெரி தும் உதவி புரிந்தார் ஜான் டிக் கென்ஸன் கம்பெனியில் கடனாக வும் முதலீடாகவும் சில அச்சியந் திரங்களைப் பெற்றார். குமாரசாமி நாயுடு கம்பெனியின் புத்தகங் கள், வெளியிட்ட தமிழ்க் கடலக வெளியீட்டு நூல்கள் ஆகியவை களைக் கடனாகவும் முதலீடாகவும் கொண்டு வாணிகம் செய்து வந் தார். நம் பெரியார் தம் முது மைப் பருவத்தில் தம் மூத்த மக னுடன் மற்றுமொரு முறை தென்னிந்தியச்சுற்றுப்பிரயாணம் செய்து தம் சொந்தக் கம்பெனி யின் வாணிக வளர்ச்சியைப் பெருக்கினார். சென்னையில் புகழ் பெற்று விளங்கும் சைவசித் தாந்த நூற்பதிப்புக் கழகம், S. R. சுப்பிரமணியப் பிள்ளை கம் பெனி, நாஷனல் பப்ளிஷிங் கம் பெனி, ம. ரா. அப்பாதுரை கம் பெனி, V. C. வெங்கடேசன் கம் பெனி, I Longman II Green & Co., (C. L. S.) ஜயம் அண்டு கம்பெனி அஸோஸியேஷன் பப் ளிஷிங் கம்பெனி முதலிய பல கம்பெனியார்களுடன் தொடர்பு கொண்டு வாணிகம் செய்து வந் தார். இங்ஙனம் தம் முயற்சியால் வாணிகத்தை வளர்த்துச் செல் வத்திலும் செல்வாக்கிலும் சிறந்து உயர்நிலையுற்றார் நம் பெரி யார். முதலியார் அவர்களின் அருமைப்புதல்வர்கள் மூவரும் தந்தைக்கேற்ற மைந்தர்களாய் ஓயாதுழைத்துக் கம்பெனியை உயர்நிலைக்குக் கொணர்ந்தனர். பெரியார் அவர்கள் தம் உழைப் பையே முதலாகக் கொண்டு படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்து புகழ்பெற்று ஏனைய வர்க்குச் சிறந்த எடுத்துக்' காட் டாக விளங்கினார்கள். முயற்சி

புடையார் இகழ்ச்சியடையார்' என்பதற்கு நம் முதலியார் அவர்களே தக்க சான்றாவர்.

குணநலன்கள் :

இங்ஙனம் எளிய முறையில் வாழ்க்கையைத் தொடங்கி உயர் நிலையுற்ற நம் பெரியார் அவர்கள் பல அரிய பண்புகள் வாய்க்கப் பெற்றிருந்தார். உழைப்பும் ஊக்கமும் அவர் வாழ்வின் உயிர் நாடிகள். அவர் பள்ளியில் கற்றது சிறிதே ஆயினும் உலகமென்னும் கலாசாலையில் முற்றக்கற்ற பேரறிஞராய்ச் சிறந்த அநுபவசாலியாய்த் திகழ்ந்தார். தம்மிடம் வருபவர்களை முகமலர்ச்சியுடன் இன்சொல் கூறி வரவேற்று உபசரிப்பதில் நம் பெரியார் அவர்கள் மிகவும் சிறந்து விளங்கினார்கள். இவ்வருங்குணத்தால் சிறந்த ஆங்கிலேயர்கள் பலரும், பேரறிஞர்களும், பெருஞ்செல்வர்களும் நம் பெரியார் அவர்களிடம் பேரன்பும் பெரு மதிப்பும் கொண்டு விளங்கினார்கள். நம் பெரியார் அவர்கள் கடமைதவறாதவர். எல்லாச் செயல்களையும் தாமே முன்னின்று செய்தால் தான் அவர் மனம் திருப்தி அடையும். வாக்குத் தவறாமை, கடமையுணர்ச்சி ஆகிய இச்சீரிய பண்புகளே முதலியார் அவர்கள் புகழேணியின் உச்சியை அடையப் படிகளாயுதவின எனலாம். நம் பெரியார் அவர்கள் தம்மிடம் தொடர்புடையவர்களிடம் பேரன்பு காட்டுவார். தாம் குமாரசாமி நாயுடு கம்பெனியில் பணியாற்றி வந்த காலம் முழுவதும் தாம்வேறு அவர்வேறு என்று கருதாமல் அவருடைய குடும்பக் காரியங்களனைத்தையும் தம் குடும்பச் செயல்கள் என எண்ணிப் பாடு பட்டு வந்தது இவருடைய சீரிய குணத்தினை விளக்குவதாகும். குமாரசாமி நாயுடு அவர்களும் நம் பெரியாரிடம் அளவற்ற அன்புடையவராய் அவரைத் மூத்த மகனாகவே கருதி வந்தார். நம் பெரியார் அவர்கட்கு அவரே முன்னின்று திருமணம் செய்து வைத்ததும், இவருக்குத் திருமணம் நிகழ்த்தி வைத்த பதினைந்தாம் நாள் தம் மூத்த மகனாகிய கன்னைய நாயுடு அவர்கட்குத் திருமணம் செய்து வைத்ததுமாகிய நிகழ்ச்சிகள் குமாரசாமி நாயுடு அவர்கட்கும், நம் பெரியார் அவர்கட்கும் இருந்த தொடர்பினை நன்கு விளக்கும். நம் பெரியார் அவர்கள் எதிர்காலத் தமிழிளைஞர் யாவரும் தம்மைப்போல உழைத்துத் தம் வாழ்க்கையில் உயர்வடையவேண்டும் என்பதில் அடங்கா வேட்கையுடையவராக விளங்கினார். தம்மை நாடிவரும் மாணவர்கட்கும், பல இடங்களில் தொழில் புரியும் இளைஞர்கட்கும், அவர் தம் வாழ்க்கையின் அநுபவங்களைச் சுவை பட எடுத்துக் கூறி அவர்களையும் அவ்வாறு உயர்நிலையுறத் தூண்டுவார். இதற்குச் சான்றாகத் தற்போது புத்தக வியாபாரியாக விளங்கும் M. D. நாகபூஷண முதலியார் அவர்களிடம் நம் பெரியார் அவர்கள் காட்டி வந்த பேரன்

யைக் குறிப்பிடலாம். நம் பெரியார் நாகபூஷண முதலியார் அவர்களைத் தம் மூத்த மகனாகவே கருதி அவர் தொழில் துறையில் பல்வகைகளிலும் முன்னேற உதவி அவர் வாழ்வை வளம்பெறச் செய்தார். நாகபூஷண முதலியார் அவர்களும் நம் பெரியாரைத் தந்தையாரென்றே கருதி அன்பு பாராட்டி வந்ததும் அவர் மைந்தர்களிடம் சகோதரரைப் போன்று பழகி வந்ததும் குறிப்பிடத்தக்கதாம். இத்தகைய பெருங்குணம் பிறரிடம் காணமுடியாத தொன்றுகுமன்றோ? நம் முதலியார் அவர்கள் செல்வத்தில் சிறந்து விளங்கியமைக்கேற்ப வழியறிந்து செலவு செய்யும் மாண்பும் பெற்று விளங்கினர். பற்பல அறச் செயல்கட்கு உதவி செய்துள்ளார். அவர் சிறப்பாக மாணவர்களிடமும் தமிழ்ப் புலவர்களிடமும் பேரன்பு கொண்டவராதலின் அவர்கட்குச் செய்த உதவிகள் மிகப்பலவாகும். "என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற நாவுக்கரசரின் நன்மொழியையே தம் வாழ்நாள் முழுவதும் குறிக் கோளாகக் கொண்டு ஒழுகி வந்தார்.

மறைவு :

இங்ஙனம் பல்லாற்றானும் சிறந்து, வாழ்வாங்கு வாழ்ந்த பெரியார் துரைசாமி முதலியார் அவர்கள் சில நாட்கள் நோய் வாய்ப்பட்டு 21-10-52 அன்று தம் 83-ஆம் ஆண்டில் இறைவன் திருவடியடைந்தனர். அவர் பொன்னுடல் மறைந்தாலும் அவர் தம் அரிய வாழ்வில் கடைப்பிடித்த அரிய பண்புகளைக் கடைப் பிடித்து நாமும் அவர் போல வாழ்க்கையில் சிறந்து விளங்க முயல்வதே நாம் அவர் நல்லுயிர்க்குச் செய்யும் மரியாதையாகும். வாழ்க மயிலை, துரைசாமி முதலியார் அவர்களின் நற்புகழ்!

அறிவுக் கதிர்

மூட நம்பிக்கை, நம் வாழ்க்கையில், ஒரு பிச்சைக்காரனுக, ஒரு கள்ளனுக, கொடுங்கோலனுக இருக்கிறது. அது மட்டுமல்ல. அது, மனிதவர்க்கத்தில் மிகப் பயங்கரமான எதிரியாகவும் இருக்கிறது.

ஏன் நாம் எதையும் பகுத்தறிவுக் கண்கொண்டே பார்க்கவேண்டும்? ஏன் நாம் ஆராய்ச்சி செய்யாமல் எதையும் ஒப்புதல் கூடாது? இந்தக் கேள்விகட்கெல்லாம் ஒரே விடைதான் கூறமுடியும்;—"மனித சமுதாயத்தின் நன்மைக்காக!"

—இங்கர்சால்

29 MAY 1955
MADRAS

ஆரம்ப ஆசிரியன்

(அகோரநாதன், அழகி குடி. B. உடையூர் P. o. சிதம்பரம் வட்டம்.)

நீர்க்காவி ஏறிப்போன வேட்டி; அதே நிறத்தையொத்த ஜிப்பா. அதில் மசிப் படர்ந்திருக்கும் பை; அதன் மேல் புராணிகர்கள் கூறுவதுபோல் இந்திரனின் உடலை ஞாபகப்படுத்தும் துண்டு. பசையில்லாத காரணத்தால் படிய மறுக்கும் கிருப்பு. ரப்பர் பந்தை அழுத்தினால் விழும் குழி போன்ற கன்னங்கள். பாதாளத்திலிருந்து எட்டிப் பார்க்கும் ஒளி இழந்த கண்கள்.

அவன் ஆரம்பப்பள்ளி ஆசிரியன். உதவி பெறும் பள்ளியில் வேலை செய்யும் துணை ஆசிரியன். வீதி வழியாக —வீட்டிற்கு வீடு நின்று, நின்று செல்கிறான். அவனைத் தொடர்ந்து சத்தமிட்டுக்கொண்டு ஓடிவரும் சிறுவர்கள். வர வர நடை வேகமாக நடக்கிறான். ஆனால், அந்த நடையில் தெம்பில்லை; ஆனால் வீம்புக்குப் போராடும் வைராக்கிய வாதியின் லட்சியம் தென்படுகிறது:

'வ. கூ. கி ஆரம்ப பள்ளி' என்ற பலகை தொங்கவிடப்பட்டிருக்கும் கட்டிடத்திற்குள் வந்து நாற்காலியில் உட்கார்ந்தான். கீழே பார்ப்பதும் பின் நிமிர்வதும் அவன் ஏதோ சிந்தனை உலகில் திரிகிறான் என்பதை எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தது.

கற்பனையாக இருக்கலாமோ!

கற்பனை! ஆனா, ஆவன்னா வரிக் காப்பாடம் சொல்லும் ஆரம்ப ஆசிரியனுக்குக் கற்பனை எதற்கு? கற்பனை தோன்றத்தான் இடம் ஏது?

பின் சிந்தனைக் கீரல்கள் முகமெல்லாம் ஓடி இருக்கக் காரணம்? வறுமையாக இருக்கலாமோ!

சர்க்கார் கொடுக்கும் 40 வடை போன்ற ரூபாயைக் கொண்டு 9 ஜீவன்களைப் பட்டினி போட்டு உயிர் காப்பாற்றும் அவனுக்கு வறுமையைப் பற்றிய சிந்தனையைத் தவிர வேறேதும் தோன்ற வேண்டிய அவசியம்!

கையெழுத்து ரிஜிஸ்டரும், மாணவர் ஆஜர் பட்டியும் காத்துக் கிடந்தன மேஜையின்மேல். அவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தன் கைவண்ணப் பேனாவைத் திறந்தான், அவ்வளவுதான் தாமதம்; அவனைப்போல் லொக் லொக்கென இரும்பி அந்த ரிஜிஸ்டரில் இரண்டு மூன்று பொட்டுகளை கக்கிவிட்டது. இடது கையால் அதைச் சாந்தப் படுத்தி பின் மாணவர்களைக் கூப்பிட்டான்,

" மாணிக்கம்!

"சார்! மாணிக்கம் நேற்று மாலை என்னை அடிச்சிப்பிட்டு ஓடிவிட்டான்!"

"சார்! இராமுவே கூப்பிட சொன்னீங்கள்ள, கூப்பிட்டேன் விழுந்து கடிச்புட்டாங்க!"

"சரி, சரி உட்கார்; இராமு எங்கேடா?"

"அவுங்க அம்மா களை வெட்ட போயிட்டாங்க சார்! அவன் புள்ளையை தூக்கி வைச்சிக்கிட்டிருக்கான் சார்!"

அவனுக்குத் தலைவலி எடுக்க ஆரம்பித்தது. பசியால் வாடி இருந்த வயிற்றிலிருந்து எரிச்சல் புகைக் கிளம்பி உடம்பெல்லாம் பற்றிக்கொண்டதைப் போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது.

தலையைப் பிடித்துக் கொண்டே சற்று நேரம் உட்கார்ந்திருந்தான். பின் வந்தவர்களைப் பார்த்தே வருகைப் பட்டியலைப் பூர்த்தி செய்து விட்டான்.

"மிஸ்டர் கஞ்சியப்பன்! மேல வீதியைப் பார்த்துக் கொண்டு வந்தீர்களா? அந்தத் தெரு பையன்கள் சரிவர வரவில்லையே!" இது தலைமை ஆசிரியர்–பொறுப்பாளர் (Manager) கேள்வி!

'ஆசிரியனும், மாடு மேய்ப்பவனும் ஒன்று' என்று தெருவில் பேசிக்கொண்டு போனவர்களுடைய வார்த்தைகள் அவன் காதில் விழுந்தது.

சிரித்தான்! பைத்தியக்காரன் சிரிப்பு!

"சார், சம்பளத்திற்காக வாத்தியாரெல்லாரா் பையன்களை ஓட்டிக் கிட்டு போகிறவர்கள் என்று தெருவார்கள் கூறுவது தங்கள் காதுக்கு எட்டுகிறதுங்களா?"

"கஞ்சியப்பன்! எல்லாம் கொஞ்ச நாளைக்கு அப்படித்தானிருக்கும். அறிவு வளர்ந்து விட்டால் நம் தொண்டை நன்றாக உணருவார்கள்! பெருமையாகவும் நினைப்பார்கள் பாடத்தைப் பாருங்கள்."

பசி அவன் காதை அடைத்தது மட்டுமல்ல, கண்களையும் மறைத்து விட்டது. மூன்றும் வகுப்புப் பாடத்தை ஆரம்பித்தான்.

"டேய் மணி! இன்றைக்கு எந்தப் பாடம்!"

"பிச்சைக்காரன் பாடத்தில் கேள்வி கேட்க வேண்டும் சார்!"

"இராமு! நாம் யாருக்குப் பிச்சைபோட வேண்டும்?"

"முடவர்களுக்கும், குருடர்களுக்கும், சக்தியற்றவர்களுக்கும் பிச்சை போட வேண்டும்."

கண், காது உள்ளவர்களும் பிச்சை எடுக்கக் காரணம்? அவன் சிந்தனை காரணத்தைக் கண்டுபிடிக்கத் தலை தெறிக்கும் வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது.

மணி ஓடி வந்து "சார் சார்! வெள்ளையும் சள்ளையுமாகக்குடை பிடித்துக்கொண்டு வராங்க சார்! இன்ஸ்பெக்.......

ஆம். இன்ஸ்பெக்டர் ரங்கநாதன்தான் விரைந்து வந்து நுழைகிறார்.

"வணக்கம் சார்"

"வணக்கம்; ரிஜிஸ்டரை உடனே கொண்டு வாருங்கள்."

காலையில் குடிசைத் தொழில் (சாராயம் காய்ச்சுதல்) நடத்துவதைக் கண்டு பிடிக்க வந்த ஜவான்கள் வீட்டைச் சுற்றிலும் திடீரென்று முற்றுகை இட்டார்களே! அந்த ஞாபகம் கஞ்சியப்பனுக்கு வந்து மறைந்தது.

"மிஸ்டர் கஞ்சியப்பன்! வரவு 13 மாணவர்கள் என்று போட்டிருக்கிறீர்கள் இருப்பது 12 பேர் தானே" என்று கடுப்பாகக்கேட்டார் இன்ஸ்பெக்டர் ரங்கநாதன்.

"இப்பொழுதுதான் பாண்டியன் தகப்பனார் கழனி வெளிக்கு கஞ்சி கொண்டு போக வேண்டுமென்று அழைத்துக் கொண்டு போனார் சார்!

"பொய்! இதை ஒத்துக் கொள்ள முடியாது. சரி பாடக் குறிப்பை (Notes of Lesson)க் கொடுங்கள்."

பார்த்தார் இன்ஸ்பெக்டர் ரங்கநாதம் "தமிழுக்கு நோட்ஸ் எங்கே?"

"எழுதவில்லை சார்"

"ஏன்?"

"13 ஆண்டுகளாக நான் ஆசிரியனாக இருக்கிறேன். தமிழில் நல்ல பாண்டித்தியம் உண்டு ஆகையால்.............

"நீ இளங்கோ அடிகளாக இருக்கலாம்; அதனால் யாருக்கென்ன? சம்பளம் மாத்திரம் குறைவாய் இருக்கிறதென்று கூப்பாடு போடுறீங்க! கொடுக்கிற சம்பளத்திற்கு வேலையைக் காணோமே! சரி சரி மானேஜர் கோவிந்தன்! பார்வையாளர் (Visit) புத்தகத்தைக் கொண்டு வாருங்கள்.

எழுத வேண்டியவைகளை எழுதி விட்டு இன்ஸ்பெக்டர் ரெங்கநாதன் சென்று விட்டார். மானேஜர் கோவிந்தனும். கஞ்சியப்பனும் படித்தார்கள்.

'பொய்யாக ஒரு மாணவனுக்கு ஆஜர் போட்டதாலும், தமிழ்ப் பாடத்திற்கு நோட்ஸ் எழுதாமையாலும் துணை ஆசிரியன் கஞ்சியப்பனுக்கு சம்பளத்தில் 10% பிடித்தம் செய்யும்படி சிபார்சு செய்திருக்கிறேன்.

மானேஜர் கோவிந்தனுக்கு ஒன்றும் புரியவில்லை. "மிஸ்டர் நீங்கள் செய்வது ஒன்றும் பிடிக்கவில்லை இப்படியெல்லாம் நடந்து கொண்டால் 3 மாத நோட்டீஸ் கொடுத்து விடுவேன்" என்று சீறி விழுந்தார்.

இதற்குள் தபால்காரன் தபால்களைக் கொண்டு வந்து கொடுத்தான். கஞ்சியப்பன் 'ஆரம்ப ஆசிரியன்' பத்திரிகையை ஆவலாகப் பிரித்துப் பார்த்தான். அதில் மலையாளத்திலுள்ள ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள்பொது உடைமைக் கொள்கைகளை மாணவர்களுக்குப் போதிக்கிறார்கள்.

அவர்களைக் கண்டு பிடித்துக் கடுமையான தண்டனை அளிக்க சர்க்கார் முனைந்து வருகிறது' "ஏன் எடுக்க மாட்டார்கள்" என்று தன்னையும் மறந்து உரக்கக் கூவி விட்டான்.

அரசாங்கத்திற்குப் பயந்து அவன் அபேத வாதத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தாலும் அவன் மனைவி, பிள்ளைகளை வதைக்கும் பட்டினி வாழ்வு அவனை சமதர்ம அநுதாபி ஆகும்படி செய்து வைத்து விட்டது.

அடுத்த பக்கத்தைப் புரட்டினான். ஆசிரியர் சம்பள உயர்வைப் பற்றி மாநாட்டிற்குத் தலைமை வகித்த 'இராகவன்' மார்க்கசீய ஆதாரத்தோடு, ஆணித்தரமாகப் பேசியிருந்தார்.

படித்தான்.

'ஏகாதிபத்தியமும்,முதலாளித்துவமும் தங்களுக்குத் தாங்களே புதை குழி தோண்டிக் கொள்கின்றன' என்று மார்க்ஸ் கூறி இருப்பதைப் போல சென்னை அரசாங்கம் செய்த வேலை, ஆசிரியர் சமூகத்தைப் பட்டினி போட்டு தனக்குத்தானே புதை குழி தோண்டிக் கொள்வதோடு எதிர்கால மன்னர் (மாணவர்) களையும் அபேத வாதத்திற்கு அநுதாபிகளாய் ஆகும்படி செய்து கொண்டது.'

படித்து முடித்த அவன் உதட்டிலே மரண முடிவிலே கடைவாயில் நெளிந்தோடும் புன் சிரிப்புத் தவழ்ந்தோடியது.

வெறும் வீர வார்த்தைகளினால் மட்டும் வயிறு நிரம்பி விடப் போகிறதா? என்றது அவன் மனம்.

பெரு மூச்சு விட்டுக் கொண்டு நாற்காலியில் அமர்ந்தான். மணி அடித்தது. மெல்ல வீட்டிற்கு நடை கட்டினான். வீட்டிற்குச் சென்று வேதனை அடைவதை விடக் கொஞ்ச நேரம் வேறு எங்காவது சென்று நாழியைக் கடத்தி விட்டு வருவோம் என்று வடக்குத் தெரு வழியாக நடந்தான். கடைக்காரர் கண்டு விட்டார்!

"சார்! கடை பாக்கி......"

"சம்பளம் வந்தவுடனே கொடுத்து விடுகிறேனுங்க"

"உங்களுக்குக் குறிப்பிட்ட தேதியிலா வருகிறது"

"இப்பெல்லாம் 10 தேதிக்குள் வந்து விடுகிறதுங்க"

இரவு 8 மணிக்கு வீட்டிற்குச் சென்றான். நாவறள, நெஞ்சு வெடிக்க.

"அப்பா! காசு வேண்டும் நோட்டு வாங்க" என்றான் பெரிய பையன்.

"கால் சட்டை தைச்சுகிட்டு வந்தியாப்பா" என்றது சிறிய குழந்தை.

வீல்! வீல்! என்று கத்தியது கைக் குழந்தை பாலில்லாமல்.

அவனால் சகிக்க முடியவில்லை,

(39—ஆம் பக்கம் பார்க்க)

சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள்

மானேஜர்கள் 4-வது மகாநாடு

29-12-1952ல், ஸ்ரீமான் டாக்டர் P. வரதராஜுலு நாயுடு சேலம் M. L. A. அவர்களின் தலைமையின் கீழ் நடைபெறவிருக்கும், 4-வது மகாநாடு சென்னை மெமோரியல் ஹாலில் (ஜனரல் ஆஸ்பத்திரியைச் சார்ந்த மெடிகல் காலேஜ் எதிரேயுள்ள கட்டிடம்) நடைபெறும்.

இதைக் கண்ணுறும் எய்டட் ஆரம்பப் பாடசாலை மேனேஜர்களும், ஆசிரிய மானேஜர்களும், ஒவ்வொரு ஜில்லா, தாலுக்கா வாரியாக இருக்கும் அன்பர்கள் தனிப் பங்கெடுத்துக்கொண்டு, இதிற் குறிப்பிட்டபடி, முக்கிய சாராம்சங்களையும், தற்சமயம் இத்தகைய மகாநாட்டின் வாய்ப்பு, இன்றியமையாதது என்பதும், அதன் பயனாக கிராண்டு, பள்ளியை நடத்தல், சம்பளம், வாடகை பணத்திட்டம் இன்னும் கல்வி சம்பந்தமான அனேக பிரச்னைகளைப் பற்றிப் பரிசீலனை செய்து நல்லதோர் முடிவு காணவோர் வாய்ப்பென்பதை எடுத்துக் காட்டியும், இன்னும் சேரவிரும்பும் பிரதிநிதிகளையும் ஷை மகாநாடு கூடும் நாளன்று விஜயம் செய்யுமாறும் யாவரும் கலந்து கொண்டு, மகாநாட்டை வெற்றிகரமாக நடத்த டெலிகேட்டுகள் கட்டணம் ரூ. 2-ம் ரிஸப்ஷன் (Reception Committee) கமிட்டி அங்கத்தினர்களாகச்சேருபவருக்கு தீர்மானங்கள் சகிதம் ரூ. 5-மாக பணம் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். மேற்கொண்டு வழங்க முன் வருபவர்களையும், நாட்டின் ஆரம்பக் கல்வி முன்னேற்றத்திற்கு உதவி ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தற்போது இது விஷயமாக அறிய விரும்புவோர், நிதி அனுப்புவோர், கடிதப் போக்குவரத்து மூலம் காரியதரிசி N.A. நடேசமுதலியார், 50 டி. எஸ். வி. கோயில் தெரு, மயிலாப்பூர் சென்னை, என்பதின் முகவரிக்கு எழுதி மற்றவிவரங்களைத் தெரிந்து கொள்ளலாம். சென்ற 26-7-1952ல் திருவாளர் டாக்டர் P. வரதராஜுலு நாயுடு M. L. A. அவர்களின் தலைமையின் கீழ் சென்னை, மாவட்ட ஆரம்பபள்ளி செயலாளர் சங்கக் குழுவின் காரியதரிசி திருவாளர் N. A. நடேசமுதலியார் கொண்டுவந்து நிறைவேற்றிய நமூனைவை கனம் முதல் மந்திரி ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார், 2 நிதிமந்திரி C. சுப்பிரமணியம், கல்வி மந்திரி M. V. கிருஷ்ணராவ் இம் மூவருக்கும் அனுப்பப்பட்டது. இதன் செய்தியை ஆரம்பக் கல்வி பத்திரிகையில் பக்கம் 7, 8-ல் ஏற்கனவே வாசித்த அன்பர்களுக்கு ஞாபகமிருக்கும். அதன்படி மிமோராண்ட சுருக்கம் அடியிற் காண்க :—

1. ஏற்கனவே மானேஜ் மெண்டுகள் கிராண்டு மான்யத்தின் சார்பாக வசதிக் குறைவு பாடுகள் அதிகரித்துக் கொண்டிருக்க, மேலும் துர் அதிர்ஷ்டவசமாய் விழிப்பாட்டத்திற் கனுசரணையாக N. G. O. குழந்தைகளுக்கும், அரிஜன குழந்தைகட்கும் கல்வி போதனைக்குரிய சம்பளம் ஈடுபடுத்துவதின் மான்ய சலுகையில் மூன்று மாதத்திற்கொருமுறை வழங்குவதாயிருந்தால் பாடசாலை நிர்வாகம் பாதிக்கப்படுவதை மாதம் மாதம் வழங்கவும், அதன்பால், மேனேஜ் மென்டாரை மூன்று பில்களைத் தயாரித்து மாதம் மாதம் டிபார்ட்மென்டிற் குச் சமர்ப்பித்து, ஜில்லா கல்வி அதிகாரிகளே, வழங்க வேண்டிய செக்குகளை நேரடி வழங்கவும், அதன்பால் டிபார்ட்மென் டாருக்கு, பண நெருக்கடியின்பால் சிப்பந்திக் குறைபாட்டினை, போக்குவதுமாய வேலைப்பாட்டின் சிரமத்தைக் குறைப்பதென்பதினை யும் எடுத்துக் காட்டுவதாகும்.

2. சென்ற 1949-ம் ஆண்டில் கொடுக்கப்பட்டுள்ள நிர்வாக மான்யத்தை (Proceedings of the Director of Public Instruction, Madras, Dated 9th May 1949 about G. O. No. 217 Education Dated 29th January 1948) உத்திரவுப்படி 1950-ம் ஆண்டிற்கும் 1951-ம் ஆண்டிற்கும் பிடித்தம் செய்துள்ள, நிர்வாக கிறாண்ட் மான்ய சலுகையை, திரும்பப் பெறவும், ஷை உத்திரவை ரத்து செய்து, ஆசிரியர்கட்கு மேனேஜ் மென்டால் வழங்கும் அதிகப்படியான உபரி சம்பளத் தொகைகளையும், செய்துள்ள செலவினங்களையும் அப்படியே செலவினத்தில் சேர்த்துக் கொண்டு நிர்வாக மான்யத்தைக் கணக்கிட்டுப் பழயபடியே 1947 முதல் 1949 வரை கொடுத்துள்ள மானேஜ் மென்ட் நிர்வாக மான்ய சலுகையை அளிப்பதுடன் 1950, 1951 கட்கும் சேர்த்து கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(37-ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைகளின் துயரம். தாங்க முடியவில்லை இடுப்பு வலி. சிக்கு நாற்காலியில் சாய்ந்து விட்டான். அவன் கண்கள் மட்டும் எதை யோ உற்று நோக்கிக் கொண் டிருந்தது. அந்தப் பார்வை உடன்கட்டை ஏறப்போகும் சதியின் அசையாப் பார்வை போல் இருந்தது. அவன் வாய் 'செத்த வாழ்வு வாழ்வதைவிட சாவின் முத்தமே மேல்' என்று முணு முணுத்துக் கொண்டிருந் தது. அவன் கண்களிலிருந்து ஊற்று நீர் போல் தண்ணீர் கசிந்துக் கொண்டே இருந்தது. அவன் மனைவி எதற்கோ வந்த வள் மஹாபலிபுரச் சிற்பமானாள். அவர்கள் வளர்த்த பூனை சத்த மில்லாமல் அவர்கள் அடுப்பினுள் நித்திரை போயிற்று.

— முற்றிற்று —

3. நிர்வாக மான்யத்தை, 1947-ம் ஆண்டு முதல் கொடுக்கப் பட்டு வந்த முறைப் பாடுகளில் பல குறைவு பாடுகள் நிறைந்திருப்பதி னுல் முற்றும் ஒழித்துப் பழையபடியே(Efficiency)திறமை நிர்வாக மான்ய சலுகையை அளித்துவர கோருதல்.

4. Ref: Proceedings R C. No. 876 E. 2/52 dated 19th June 1952 of the Divisional Inspector of Schools, Madura Range இவ்வுத்திரவின் படி, சம்பள வசூல் முதலிய வரவு செலவுகளை அப்போதைக் கப்போதிய வேண்டுமென்பதும், பள்ளிக் கூட சம்பள வசூலுக்கு மாணவர்கட்கு உடனடியாக நேர்ஷி கேட் டுள்ள ரசீது முன்னதாக வழங்கியும், தினசரி ஆஜர்பட்டியலும் சம் பளப் பட்டியலும், பேரேடு சகிதம் பதியச் செய்வதின் அத்தியா வசியமும், மாதாந்திர வரவு செலவு கணக்குகளை குறிப்பிட்ட பாரத் தில் அனுப்புவதும், அப்படித் தவறினுல் மாதாந்திர மான்யத்தைப் பிடித்தம் செய்யப்படு மென்பதும் கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஆரம்பப் பள்ளிகளில் சென்ஸஸ் எடுக்கும் நிர்ப்பந் தம் வருடாவருடம் தோன்றுவது, வருடாந்திர இனிஸ்பெக்ஷன் ஸ்டேட் மென்டுகள், வருடாந்திர நிர்வாகஸ்டேட் மெண்டுகள் போதாக் குறைக்கு வருடாந்திர நமூனு தயாரித்தல், E. S. L. C. ஸ்டேட்மென்டு, வழக்கப்படி அனுப்பப் பெறும் மாதாந்திர கணக்கு கள், அரை வருட ஸ்டேடிக்ஸ் முதலிய விருக்க பற்ருக் குறையாக N. G. O. ஹரிஜன ஸ்டேட் மென்டுகளும் உடனடி சேர்ந்து ஊச லாடுவது முதலிய, ஆசிரியர்களாலே தயாரிக்கப்பட வேண்டியிருப் பதை முன்னிட்டு, அதனுல் பாடசாலையின் பிள்ளைகளின் போதனைத் தேர்ச்சி தடைப்படு மென்பது வெள்ளிடைமலை. அதனுல் அரசிய லார் ஆரம்ப உயர்தரப் பாடசாலைகட்கு ஒரு தனிப்பட்ட குமாஸ்தா விற்குக் குறைந்த பட்சம் ரூ. 30 சம்பளமும் 19 ரூ. பஞ்சப்படியும் சேர்த்து வழங்கவும், 1முதல் 5வகுப்பு வரையிலுள்ள ஆரம்பப் பாட சாலைகட்கு 1 அதிகப்படியான உபரி ஆசிரியரை நியமிக்கவும் கோரப்படுவது.

5. கால நிலையை உத்தேசித்து ஆசிரியர்களின் சம்பள விகி தத்தை, செகண்டரிப் பயிற்சியாளருக்கு மாதம் ரூ. 50 விகிதமும் ஹையர் கிரேட் பயிற்சியாளருக்கு மாதம் ரூ. 35 விகிதமும் 1—1—1952லிருந்தே வழங்கவும் கோரிக்கை. அதன் சார்பாக ஆசிரியர்கள் பெரும்பாலும் வருவாயில் பாதிக்கப் படுவதால் முன் பருவ மாகாண அரசியலை இயக்கவைத்த மந்திரியார்கள் மிக்க கவனத் துடன் கருணை புரிந்து ஆசிரியர்கட்கு வழங்க வேண்டுமென்று ஏட் டோடு குறிப்பிட்டுப்போன ஷை விகிதம் முறையே ரூ. 50, ரூ. 30 என்றபடியாவது வழங்கும்படி தற்கால மாகாண அரசியலாளர்

அதை யாவது அமுலுக்குக் கொண்டு வந்து வழங்கும்படி வேண்டிக் கொள்ளுதல்.

6. உயர்தர ஆரம்ப பாடசாலைகளில் 8ஆவது வகுப்பு மாணவர்கட்கு சர்க்கார்த்தேர்வு நடத்துவது போல், நடு நிலை உயர்வுப் பாடசாலைகளில் படிக்கும் 3-ம் படிவ மாணவர்கட்கும் தேர்வை முன்னிட்டு ஷை 8-வது வகுப்பை அநுசரித்த பாடதிட்டங் கொண்ட ஒரே தேர்வாக சர்க்காரால் நடத்தப்பட வேண்டுமென்பதும், அதனால் பல முக்கியமான கல்விப் பிரச்சினை வழக்கீடுகள், தொழில் முன்னேற்றம், சமூக வாழ்வில் குறையின்மை முதலிய போக்க வழியென்பதும் எடுத்துக் காட்டியுள.

7. E. S. L. C. தேர்வில் விடுக்கும் வினாத்தாள்கள் பல குறைபாடுகள் உள வென்பது, பல வருஷங்களினின்று கண்டதேயாகும். அதன்படி நீடிக்காமல் இருக்க, அந்த வகுப்புகளைக் கையாளும் செகண்டரிப் பயிற்சி ஆசிரியர்களைக் கொண்டே வினாத்தாள்களைத் தயாரிக்கும் பொறுப்பினையும் அரசியலார் சேர்த்துக்கொள்ளக் கோருதல். ஆங்கிலத்தினின்று நேர் மொழி மாற்றை ஒழித்து, சரியான தமிழ் மொழிகளை வினாக்களில் வழங்க வேண்டுமென்ற நோக்கத்தின் குறிப்பு.

8. பழயபடியே எடுகேஷன் கௌன்சிலைப் புதுப்பிக்கவும் ஆரம்ப ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பாக நால்வரும், ஸ்தலஸ்தாபன சார்பாக அறுவரும், மேனேஜர் சங்கக் குழுவினின்று ஒவ்வொரு வட்டத்தினின்றும் இருவரையும், மெஷினரி, லேபர், அரிஜன் இவைகளினின்று முறையே ஒவ்வொருவரையும், அங்கத்தினராக இருக்கவும், சந்தர்ப்பமளிக்கவும், கூடியமட்டும் வெகு விரைவில் அமுலுக்குக் கொண்டுவரக் கோருதல்.

9. (a) ஏற்கனவே ஆரம்பப்பாடசாலைகள் நடை பெறும் இடங்களின் சமீபத்தில் ஸ்தலஸ்தாபனத்தாரோ அன்றி தனிப்பட்ட நபரோ ஆரம்பப்பாடசாலைகளை ஏற்படுத்துவதை அரசியலார் அங்கீகாரம் அளிக்கக்கூடா தென்பதும்.

(b) உயர்நிலைப் பள்ளியார் 1 முதல் 5வரை வகுப்புக்களை (Elementary Sections) தனிமையாக நடத்த அனுமதிக்கக்கூடா தென்பதும் கோரப்படுவது.

10. (a) அரசாங்கத்தார் பிற்போக்கு வகுப்பினர் எனத் தோரணையில் அரசாங்கத்தார் வழங்கி வந்த இனாமாக புத்தக மான்யமாக சலுகை அளித்துவந்தமை, 1949-ம் ஆண்டோடு நிறுத்தப்பட்டது. அதனை மறுபடி, காலேஜுகளில் வாசிக்கும் மாண

(43-ம் பக்கம் பார்க்க)

சென்னை ராஜ்யத்தில் கல்வி அபிவிருத்தி

பள்ளிப்பிராய குழந்தைகளில் சிறுவர் 60 சதமும் சிறுமிகள் 35 சதமும் படிக்கிறார்கள்

ஸ்ரீ என். டி. சுந்தரவடிவேலு (கல்வி இலாகா டிப்டி டைரக்டர்)

தேசிய சர்க்கார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின் சென்ற ஐந்து வருஷ காலத்தில் கல்வி விஷயத்தில் பல்வேறு துறைகளிலும் பெரும் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. கல்வி ஸ்தாபனங்களின் தொகையும் மாணவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்திருக்கிறது என்பது மட்டுமல்ல; கல்வி ஸ்தாபனங்களில் கல்வி முறை புனரமைப்பும் குறிப்பிடத்தக்கதாகும்.

கிராமாந்திரங்களில் மக்கள், தங்கள் குழந்தைகளின் கல்வி விஷயமாக பாராமுகமாக இருந்த அவல நிலைமை நம்மில் பலருக்கு நினைவிருக்கும். பள்ளிக்கூடங்களுக்குப் போதுமான அளவு பிள்ளைகள் வரும்படியாகச் செய்வதே பெரும் பிரச்னையாக இருந்தது. ஒரு உபாத்தியாயர் சொல்லிக் கொடுப்பதற்குக்கூட போதுமான அளவு பிள்ளைகள் வராததால், பள்ளியையே மூடிவிட வேண்டிய நிலைமை ஏற்பட்ட ஆரம்ப பள்ளிக்கூடங்கள் கூட இருந்தன. ஆனால் இன்றோ, பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சேர வருவோர் எல்லோருக்கும் இடமளிப்பதே பெரும் பிரச்னையாக இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

சென்ற தலைமுறையில் நமது சமுதாயத்தில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி, கடந்த மகாயுத்தத்தின்போது பல்வேறு நாடுகளுக்கும் சென்றுவிட்டு வந்த நமது போர் வீரர்கள் கல்வியில் ஆர்வம் மிகுந்தவர்களாகத் திரும்பி வந்த நிலைமை, ராணுவத்தாரின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் முதலியன எல்லாம், நமது ராஜ்யத்தில் முன்பு எப்பொழுதும் காணாத அளவுக்குக் கல்வி அபிவிருத்திக்குக் காரணமாயின. தலைமுறை தலைமுறையாக கல்வி வாசனை இல்லாத கிராமவாசிகள் கூட, கல்வி விஷயத்திலே அக்கறை காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்.

மக்களைக் கைதூக்கிவிட கல்வியே சிறந்த கருவி

படுகுழியில் வீழ்ந்து கிடக்கும் மக்களைக் கைதூக்கி விடுவதற்கு, அவர்களிடையே கல்வி அறிவைப் பரப்புவதே மிகச் சிறந்த சாதனம் என்பதை உணர்ந்த நமது சர்க்கார், புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ள நிலைமையையும் கவனித்தது. பல கிராமங்கள் எத்தகைய கல்வி வசதியுமின்றி இருப்பதையும் நமது சர்க்கார் கவனித்தது. ஐந்நூறு ஜனத் தொகையும் அதற்கு மேலும்

உள்ள கிராமங்கள் எல்லாவற்றி லும் குறைந்த பட்சம் கிராமத் துக்கு ஒரு பள்ளிக்கூடமாவது ஏற்படுத்தவேண்டும் என்று சர்க் கார் திட்டமிட்டனர். இதை யொட்டி பள்ளிகள் இல்லாத இடங்களில் பள்ளிகளை ஏற்படுத் துவதை முதல் வேலையாகக் கொள்ளுமாறு ஸ்தல ஸ்தாபனங் களிடம் கோரப்பட்டது. ஒவ் வொரு ஜில்லாவிலும் குறிப் பிட்ட சில கிராமப் பிரதேசங் களில் பரீட்சார்த்தமாக கட்டாய ஆரம்பக் கல்வி அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்கள் இல்லாததும், 1000 ஜனங்களுக்கு அதிகமாக வசிக்கக் கூடியதுமான கிராமங் களில் புதுப் பள்ளிக்கூடங்களை ஆரம்பிப்பதில் ஜில்லா போர்டு களுக்கு உதவுவதற்கென்று சர்க் கார் ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருக்கிறார்கள். இப் போது 1,829 இடங்களில் கட் டாய ஆரம்பக் கல்வித் திட்டம் அமுலில் இருந்து வருகிறது. இதுபோக, நகரங்களிலும் கிரா மங்களிலும் 29 இடங்களில் கட் டாய ஆரம்பக் கல்வி, சென்ற மகாயுத்தத்திற்கு முன்பிருந்தே, அமுலில் இருந்து வருகிறது. இந்த ஏற்பாடுகளின் காரணமாக 1946-ல் 35,916 ஆக இருந்த ஆரம்பப் பள்ளிகள் 1950—51ல் 39,000 ஆக அதிகரித்திருக்கின் றன. 1945—46ல் ஆரம்பப் பள்ளிகளில் படித்து வந்த குழந் தைகள் தொகை 32·42 லட்சம் என்றால் இப்பொழுது அவர்கள் தொகை 40·27 லட்சமாக இருக் கிறது. **ஆறிலிருந்து 12 வயது வரை உள்ள குழந்தைகளில் ஆண் குழந்தைகளில் 60·6 சத விகித மும், பெண் குழந்தைகளில் 35 2 சத விகிதமும் இப்பொழுது பள்ளி களில் கல்வி கற்று வருகிறார்கள்.** ஆரம்ப கல்விக்கு செலவு 1945–46ல் 3·27 கோடியாக இருந்தது. 1950—51ல் அச் செலவு 6·66 கோடியாக அதிகரித்திருக்கிறது.

(41-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கட்கு மாத்திரம் தொடர்பாக வழங்கி வருவதுபோல, ஆரம்பப் பள்ளி மாணவர்கட்கும் வழங்க மன்றாடிக் கேட்கும் தீர்மானம். அதன்பால் ஹரிஜன சேவா நிதி அரசியலார்க்கு உத்திரவிட வேண்டு மென்பதும்.

(b) S. S. L. C. மாணவர்கள் தவறிய பாடங்கட்கு அரசிய லார் பரீட்சைக்கு உட்கார அனுமதிப்பதுபோல, E. S. L. C மாண வர்கட்கும் அவ்வரிய சலுகையைக் காட்டவும், அதனால் ஆரம்பப் பள்ளிகளின் உயர்வை நீடிக்க வைக்கமுடியுமென்பதையும், பிரேரே பணை. இத்தியாதி விஷயாதிகளை நடைமுறையில் வழங்கி வருவதானால் மேனேஜர்க் குழுவினர்ச் சங்கம் பெரிதும் பாராட்டுமென்றும், அர சியலாரின் ஒத்துழைப்பை ஏற்றுக் கொள்ள முன் வருவதென்பதும் குறிப்பிடப் பட்டது.

ஏட்டுப் படிப்பை மாற்றி ஆதாரக் கல்விக்கு ஆதரவு

சில வருஷங்களாகவே ஏற்பட்டு வரும் கல்வி புனரமைப்பைப்பற்றிக் கவனிப்போம். முன்பிருந்த கல்வி வெறும் ஏட்டுப் படிப்பு என்றும் கற்பவர்கள் ஏதோ கேட்டுவிட்டுப் போகிறவர்களாக இருக்கிறார்களே அல்லாமல் கல்வி நடவடிக்கைகளில் பங்கு கொள்ளவில்லை என்றும் அறிந்தோம். **உடல், மனம், அறிவு ஆகிய மூன்றும் ஏகோபித்து வளர்ச்சியடையச் செய்வதே கல்வியின் நோக்கமாக இருக்கவேண்டும் என்றும் இதற்காகத் தொழில் புரிந்துகொண்டே கற்கும் கல்வி அவசியம் என்றும் கருதினோம். இதையொட்டி ஆரம்பப் பள்ளிகளை, ஆதாரக் கல்விப் பள்ளிகளாக்க முடிவு செய்யப்பட்டது. இந்த ஆதாரக் கல்விப் பள்ளிகளில் கைத்தொழில்களுடன் கூடிய கல்வி போதனை உண்டு. எத்தகைய தொழில்கள் என்பது அந்தந்த இட சூழ்நிலைகளுக் கேற்றவாறு இருக்கும்.** இந்த நடவடிக்கைகளின் விளைவாக இன்று இந்த ராஜ்யத்தில் 507 ஆதாரப் பள்ளிகள் இருக்கின்றன. தவிரவும் ஆதாரக் கல்விக்கு உபாத்தியாயர்களை தயார் செய்வதற்கென்று 59 ஆதாரக் கல்வி பயிற்சிப் பள்ளிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. நாற்பது ஆதாரக் கல்வி பயிற்சிப் பள்ளிகளில், சாதாரண ஆரம்பப் பள்ளி உபாத்தியாயர்களுக்கு மறு பயிற்சியும் அளிக்கப்பட்டிருக்கிறது.

கல்வி ஸ்தாபனங்களின் முறையான அபிவிருத்திக்கு உபாத்திமை தொழில்புரிவோர் திருப்தியுள்ளவர்களாக இருக்கச் செய்வது அவசியம் என்பதையும் சர்க்கார் உணர்ந்தே யிருக்கிறது. இதையொட்டி, பல்வேறு வகை ஸ்தாபனங்களும் நடத்தும் பள்ளிகளில் உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கும் சம்பள விகித விஷயம் கவனிக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டது. 1946 முடிவு வரை எய்டட் பள்ளிகளில் ஹையர் எலிமெண்டரி கிரேட் உபாத்தியாயருக்கு ரூ. 16 கிராண்ட் தரப்பட்டு வந்தது. ஆனால் தற்போது கிராண்ட் விகிதம் 27—½—30 ஆகும். இதே போல, இந்த அளவுக்கு இல்லாவிடினும், பல்வேறு கிரேடு உபாத்தியாயர்களின் சம்பள விகிதமும், பல்வேறு யானேஜ்மெண்ட் பள்ளிகளிலும் அனுகுணமாகத் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது.

மத்யதர கல்வி அபிவிருத்தி பிரமாதம்

செகண்டரி கல்வி அல்லது மத்யதர கல்விபற்றிக் கவனிப்போம், இந்தத் துறையில் கல்வி அபிவிருத்தி இன்னும் பிரமாதமாக இருக்கிறது. இந்த ராஜ்யத்தில் 1945—46ல் 655 ஆண்கள் செகண்டரி ஸ்கூல்களும் 200 பெண்கள் செகண்டரி ஸ்கூல்களும் இருந்தன. 1950—51ல்

அவை முறையே 1,143 ஆகவும் 256 ஆகவும் அதிகரித்திருக்கின்றன. இப்பொழுது செகண்டரி ஸ்கூல்கள் தொகை 1,526 ஆக உயர்ந்திருக்கிறது. ஒவ்வொரு தாலூக்காவிலும் குறைந்த பட்சம் ஒரு ஹைஸ்கூலாவது ஏற்படுத்தியாகவேண்டும் என்ற கொள்கையைக் கொண்ட நமது ராஜ்ய சர்க்கார் இந்த மத்யதர கல்விக்கு அளித்து வரும் ஊக்கம், உதவி ஆகியவற்றின் பலனே இந்த அபிவிருத்தி. இவற்றில் மாணவர்கள் தொகை 325,117 ஆகவும் மாணவிகள் தொகை 79,821 ஆகவும் இருந்ததானது 1950—51ல் முறையே 534,122 ஆகவும் 123,527 ஆகவும் உயர்ந்திருக்கிறது. மத்யதர கல்விக்கு ஊக்கமளிப்பதற்காக மான்யத் தொகை, உதவித் தொகை விதிகளும் தாராளமாக்கப் பட்டிருக்கின்றன. எய்டட் செகண்டரி பள்ளிகளுக்கு உபாத்தியாயர்களுக்கான கிராண்ட் மொத்தத்தில் பாதி என்றிருந்தது மூன்றில் இரண்டு பாகமாக உயர்த்தப் பட்டிருக்கிறது. செகண்டரி ஸ்கூல்களை நடத்துவதற்காக, ஜில்லா போர்டுகளுக்கும் முனிசிபாலிட்டிகளுக்கும் குறிப்பிட்ட தொகை மொத்தமாக உதவித் தொகையாகக் கொடுப்பதுபோய் இவைகளுக்கு அந்த செலவில் சரிபாதிப் பணம் உதவித் தொகையாகத் தரப்படுகிறது. இதையொட்டி மத்யதரக் கல்விக்கு ராஜ்ய சர்க்கார் செலவிடும் பணம் ரூ. 45,19,142 ஆக இருந்ததிலிருந்து 1950—51ல் ரூ. 1,30,37,772 ஆக உயர்ந்திருக்கிறது.

தொகையில் மட்டுமின்றி தரத்திலும் உயர்வு

மத்யதர கல்வி அபிவிருத்தி தொகை வழியில் மட்டுமின்றி தரத்திலும் உயர்ந்திருக்கிறது. மத்யதர கல்வி பெறும் மாணவர், அவரவர் மன, செயல் திறன், இயல்புகளுக்கு ஏற்றபடி இல்லாமல், வகுக்கப்பட்ட ஒரு நிர்ணயமான கல்வியையே பெற வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிறார்கள் என்னும் விஷயமும் கவனிக்கப்பட்டது. வாழ்க்கைக்குப் பிரயோஜனப் படக்கூடியதாகவும், மாணவரை நல்ல பிரஜைகளாக ஆக்குவதற்கான பயிற்சி தரக்கூடியதாகவும் உள்ள அம்சங்கள் அதில் போதிய அளவு இல்லை. ஆகவே அங்கெல்லாம் மாணவர்கள் விரும்பக்கூடிய பல தரப்பட்ட கைத்தொழில் கல்விகளையும் அளிக்க வசதி ஏற்படுத்த வேண்டும் என்று உணரப்பட்டது. இதையொட்டி 1948-49-லிருந்து செகண்டரி பள்ளி கல்வி முறை புனரமைப்பு செய்யப்பட்டது. காரியாலய எழுத்து வேலைகளில் பயிற்சி தரக்கூடிய பகுதி, கைத்தொழில் நுணுக்க கல்விக்கு பூர்வாங்க பயிற்சி தரும் பகுதி, மனை பராமரிப்புக்கு பயிற்சி தரும் பகுதி முதலிய பல தரப்பட்ட பகுதிகள் ஏற்படுத்தப்பட்டன.

சுயாட்சி, பார்லிமெண்டரி ஜனநாயக முறைகள், ஒழுக்கம்,

நந்நடத்தை முதலியவைகளில் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்காக, பயிற்சிப் பள்ளிகளில் நல்ல பிரஜைகளாவதற்கான பயிற்சி முறையும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. பள்ளிகளில், கைத்தொழில் வேலைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதானது, இளைஞர்களுக்கு படிக்கும் போதே தொழில் கற்கும் சந்தர்ப்பத்தைத், தருகிறது; தன்னம்பிக்கை ஏற்படுத்துகிறது; காரியமாற்றும் திறமையையும் வளர்க்கிறது.

போதனு மொழி

போதனுமொழி விஷயமாகச் செய்யப்பட்டுள்ள முடிவையும் இங்கு குறிப்பிடுதல் அவசியம். **தொட்டிலில் இருந்த நாள்தொட்டு, மூச்சின் மூச்சாய், ரத்தத்தின் ரத்தமாய் இருக்கின்ற மொழியே சிறந்த போதனு மொழியாக இருக்கவல்லது என்பது யாரும் அறிந்த உண்மை.** நம்மில் மிகப் பெரும்பாலோருக்கு அந்த மொழிதான் தாய்மொழி. இதையொட்டியே தான் மாணவர்களின் தாய்மொழியே போதனுமொழியாக இருக்கவேண்டும் என்று 1938-லேயே சர்க்கார் உத்தரவிட்டது. தற்போதுள்ள நிலைமையில் மிகப் பெரும்பாலான பிரதேசங்களில் பெரும்பாலானவர்களின் தாய்மொழியும் பிராந்திய மொழியும் ஒன்றாகவே இருக்கிறது. ஆகவேதான் ஹைஸ்கூல்களில் பிராந்திய மொழியையே போதனு மொழியாகக் கொள்ளுமாறு சர்க்கார் உத்தரவு பிறப்பித்தனர். இருப்பினும் ஏதாவதொரு குறிப்பிட்ட பிரதேசத்தில் மொழிவாரியான மைனாரிட்டிகள் கணிசமான அளவில் இருந்து, அவர்கள் தங்கள் மொழி போதனு மொழியாக இருக்கவேண்டும் என்று விரும்புவார்களானால் அப்படி வழி செய்யவும் வசதி செய்யப் பட்டிருக்கிறது.

உயர்தரக் கல்விக்கு, இப்போதுள்ள நிலைமையில் ஆங்கிலத்தில் அதிக பாண்டித்யம் அவசியமாகிறது. பதினைந்து வருஷகாலத்தில இந்திய யூனியனின் உத்யோக பூர்வமான பாஷை ஹிந்தியாக இருக்கவிருக்கிறது. உயர்தரக் கல்வியின் அவசியத்தை ஒட்டியும், அரசியல் பூர்வ தேவைகளைக் கருதியும், நமது பள்ளிகளில் ஆங்கிலம், ஹிந்தி இரண்டையும் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஹரிஜனங்களுக்கு ஓர் வரப்பிரசாதம்

எல்லா கல்வி ஸ்தானங்களிலும் எந்தவிதமான கல்விக்கும் ஹரிஜன மாணவர்களுக்கு சம்பளம் இல்லை என்பது ஹரிஜனங்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். சர்க்கார் கெஜட் பதிவில்லாத ஊழியர்கள் ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள், எய்டெட் பள்ளி உபாத்தியாயர்கள் ஆகியவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் யாவரும் அறிந்ததே.

சுருங்கக் கூறுமிடத்து, **மனப்பாங்குக்கு ஏற்ற கல்வி, தாய்மொழி மூலம் கல்வி போதிப்பது, நல்ல பிரஜைகளாவதற்கான பயிற்சி அளிப்பது. புஸ்தகம்**

படிப்பதோடு இல்லாமல், வெளி இடங்களுக்கும் அழைத்துச் சென்று இயற்கைச் சூழலில் பயிற்சி தருவதில் கவனம் காட்டுவது, ராணுவப் பயிற்சிக்கு வசதி செய்திருப்பது முதலானவைகள், சென்ற ஐந்து வருஷ காலத்தில் நமது ஹைஸ்கூல்களில் நிகழ்ந்துள்ள மாறுதல்களில் மிகவும் குறிப்பிடத் தக்கவையாகும்.

கல்லூரிகள் அதிகரிப்பு

கல்லூரிக் கல்வி விஷயமாக, ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்தபட்சம் ஒரு கல்லூரியாவது இருக்கவேண்டும் என்பது சர்க்காரின் கொள்கை. தனிப்பட்டவர்கள், கல்லூரி கல்வி வசதிகள் ஏற்படுத்துவதில் ஊக்கமூட்டுவதற்காக எய்டட் கல்லூரிகளுக்கு, உபாத்தியாயர்களுக்கான கிராண்ட், சரிபாதி என்பதிலிருந்து மூன்றில் இரண்டு பாகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் பல பிரைவேட் கல்லூரிகள் ஏற்பட வசதி ஏற்பட்டது.

1945-46-ல் 59 கல்லூரிகள் மட்டும் இருந்தன. 1950-51-ல் அவற்றின் தொகை 70 ஆக அதிகரித்துவிட்டது. கலைக் கல்லூரிகள் தான் அதிகரித்திருக்கிறது என்பதல்ல; தொழில் இயல் கல்லூரிகளும் அதிகரித்திருக்கின்றன. 1945-46-ல் 6 பயிற்சிக் கல்லூரிகள் இருந்தன. 1950-51-ல் அவற்றின் தொகை 14 ஆக அதிகரித்துள்ளன. காகினடாவில் ஒன்றும், அனந்தபூரில் ஒன்றும், கோயம்பத்தூரில் ஒன்றுமாக மூன்று புது சர்க்கார் இஞ்சினீரிங் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டதையும் 2 சர்க்கார் பயிற்சிக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதையும் ஈண்டுக் குறிப்பிடுவது அவசியம்.

முதியோர் கல்வி

கல்வி அறிவின்மை மிகுந்துள்ள நமது இந்தியாபோன்ற தேசத்தில் முதியோர் கல்வியின் முக்கியத்துவமும் உணரப்பட்டு அது சம்பந்தமாக நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. 2,300 முதியோர் கல்விப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. சமுதாய முதியோர் கல்விக்கான 3 வருஷ திட்டத்தின் கீழ் 52·1 ஆயிரம் பேர் கல்வி பெற்று வருகிறார்கள். இதற்காக 14·85 லட்சம் ரூபாய் செலவாகிறது.

வாசகசாலை இயக்கம்

இனி வாசகசாலை விஷயத்தைக் கவனிப்போம். படிப்பு வழக்கத்தை ஊக்குவிப்பதற்காக, வாசகசாலை இயக்கப் பொறுப்பை சர்க்காரே மேற்கொண்டிருக்கிறார்கள். சென்னை ராஜ்ய 1948-ம் வருஷத்திய வாசகசாலைச் சட்டம் இயற்றப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் வாசகசாலைகளை ஏற்படுத்துவதே இதன் நோக்கம். இத்தகைய சட்டத்தை இந்தியாவிலேயே முதன் முறையாக இயற்றி அமுல் நடத்தும் பெருமை சென்னைக்கே உண்டு. 6 ஜில்லாக்களில் முதல் படியாக மத்ய

வாசகசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றை மேற்கொண்டு விரிவுபடுத்துவதற்கான திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது இவை போக சர்க்கார் உதவி பெறும் வாசகசாலைகள் 2,000–க்கு மேற்பட்டு இருக்கின்றது.

அங்கவீனர்கள் கல்விக்கும் அதிக ஆதரவு, காட்டப்பட்டிருக்கிறது. குருட்டுக் குழந்தைகளுக்கான சர்க்கார் பள்ளிகள், தெலுங்கு ஜில்லாக்களுக்காக கடப்பையில் ஒன்றும், தமிழ் ஜில்லாக்களுக்காக சேலத்தில் ஒன்றும், கன்னட, மலையாளம் ஜில்லாக்களுக்காக ரகோட்டில் ஒன்றும் புதிதாகத் திறக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய பள்ளிகள் மொத்தம் 7 இருக்கின்றன. தென் மலபாரில் கண்ணுங்காட்டில் ஊமைப் பள்ளிக்கூடம் ஒன்றைச் சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அரசாங்க உதவி பெறும் ஊமைப் பள்ளிக்கூடங்கள் இதுபோக 5 இருக்கின்றன.

கல்வித் துறையில் இந்த அபிவிருத்திகளினால் பல்வேறு படிவங்களுக்கும் உபாத்தியாயர்கள் தேவை அதிகரிப்பதற்காக சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 1945–46ல் உபாத்திமைப் பயிற்சி பெற்றுவந்தவர்கள் தொகை 13,904. ஆனால் 1950-51ல் இவர்கள் தொகை 20,976 ஆக அதிகரித்திருக்கிறது.

பயிற்சிப் பள்ளிகள் கல்லூரிகளின் செலவுக்காக 1946–ல் சர்க்கார் செலவு ரூ. 40,10,000. இதே காரியத்துக்கு 1950-51ல் ஆன செலவு ரூ. 57,20,000.

அதிகரித்துள்ள கல்விச் செலவுகளினால் 1945-46–ல் மொத்தம் கல்விக்காகச் செலவிடப்பட்டது. 4·6 கோடியாக இருக்க 1951-52–ல் செலவு 11·39 கோடியாக அதிகரித்திருக்கிறது. இவ்வருஷ பட்ஜெட்டில் கல்விக்காக சர்க்கார் ரூ. 11,79,63,200 ஒதுக்கியிருக்கிறார்கள்.

கல்வி தேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அது சம்பந்தமாக சர்க்கார் தக்க அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

[சென்னை ஆல் இந்தியா ரேடியோ நிலைய ஒலிபரப்பு].

Edited, Printed and Published, by P. Veeraraghavan, at Venkatesan' Press, 94/95 New St. Mannady, Madras—1.